393

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை




| மலர் 27 | நள ஹூ புரட்டாசி மீ 1உ [17—9—76] | இதழ் 9 |
| --- | --- | --- |

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

# திருவியலூர் உய்ய வந்த தேவநாயனுர்

அருளிய

# திருவுந்தியார்—உரைவிளக்கம்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் பாலகவி
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை

(மலர் 27 இதழ்-8 பக்கம் 385-ன் தொடர்ச்சி)

பெற்றசிற் றின்பமே பேரின்ப மாயங்கே
முற்ற வரும்பரி சுந்தீபற
முளையாது மாயை என் றுந்தீபற. 33

சிவரூபத்தை உணர்ந்த நிலையிலும், உடம்பு உள்ளவரை அநுபவத்துக்கு வருவதாகிய பிராரத்துவம் மாயையின் விளைவுகளாகிய கருவிகளுடன் கூடி நுகர்வதற்கு வருமாதலின், அங்ஙனம் வரும் சிற்றின்பமே, சிவம் ஆன்மாவுடன் இரண்டறக் கலந்து சிவபோகத்தை நுகர்விக்கச் செய்வதால்,பேரின்பமாய் அமையும்படி, முதிரவரும் தன்மையை உடையது, அதனால் மாயையும், மல கன்மங்களும் முளைக்க மாட்டா.

உயிர்கள் செய்கின்ற நல்வினை. தீவினைகளாகிய இரண்டும் ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்துவம் என மூன்று வகைப்பட்டு ஈட்டுவதும், சேர்த்து வைப்பதும், அநுபவத்துக்கு வருவதுமாகியிருக்கும். பிறப்புக்கள் தோறும் செய்து வருகின்ற வினைகள் "ஆகாமியம்" எனவும், அவ்வாறு செய்து செய்து சேர்த்து வைத்தவை "சஞ்சிதம்" எனவும், அங்ஙனம் சேர்த்து வைத்ததிலிருந்து எடுத்த பிறப்பின் அநுபவத்துக்கு வருவது "பிராரத்துவம்" எனவும் சொல்லப்பெறும். வினை நீக்கமே முத்திப் பேற்றிற்கு அடிப்படை. முத்திறப்பட்டு நிற்கும் அதில் சஞ்சிதமாகிய பெரிய சுமை, ஞானசிரியனது தீக்ஷாநுக்கிரகத்தால் சாம்பராகிவிடும். 'புண்ணிய உலகினிற் பயின்ற பாவத்தை, நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே" என்னும் அப்பரடிகள் திருவாக்கு இக்குறிப்பை விளக்க எழுந்ததேயாகும். பிராரத்துவம், உடம்பு உள்ளவரைநின்று அநுபவப்பட்டு ஒழியும். "வினைப்போக மேயொரு தேகங் கண்டாய் வினை தானொழிந்தால்,தினைப் போதளவும் நில்லாது" என்னும் பட்டினத்தடிகள் திருவாக்கு இதனை உணர்த்தும்.

எல்லா உயிர்களும் பிராரத்துவவினையை நுகரும் பொழுதே, ஆகாமிய வினையை ஈட்டிச் சேகரித்து வைக்கின்றன. "மேலைக்கு வித்துமாகி விளைந்தவை உணவுமாகி" என்பது சிவஞான சித்தியார். சிவஞான அநுபவம் உடைய அருட் குரவரின் அநுக்கிரகம் கிடைத்துச், சஞ்சிதத்தை ஒழித்துக் கொண்டாலும், பின்னர் உண்டாகும் பிராரத்துவ நுகர்ச்சியின்வழி, ஆகாமியம் ஏறுமாயின், சிவதீக்ஷையாற் பெற்றபேறு பயனற்றதாகி விடும். எனவே, தீக்ஷையின் பின்

னர் ஆகாமிய வினை ஏறாதிருப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய சாதனம், ஆன்ம இச்சா ஞானக் கிரியைகள் சிவ இச்சா ஞானக் கிரியையினுள் அடங்கியிருக்க 'எல்லாம் சிவன் செயல்'' எனச், சுதந்தரமற்றிருப்பதேயாகும். பிராரத்துவ வினை உடம்போடு ஒழியும் என்பதையும், ஆகாமிய வினை சேராது அருள் சுடும் என்பதையும் ''திருவருட் பயன்'' என்ற வினை உடலோடேகுமிடை யேறும்வினை, தோன்றில் அருளே சுடும் என்னும் திருக்குறளில் கூறுகின்றது.

சீவன் முத்தர்களாகிய பரமஞானிகள், உடலிருப்புப் பற்றி வரும் பிராரத்துவ வினையை அநுபவிக்கும்போது, ஆகாமிய வினை சேராமலிருப்பதற்கு, அருள்வயப்பட்டு நின்றே அப் பிராரத்துவ வினையை அநுபவிப்பார்கள். அதனால் அவர்களது செயலெல்லாம், சிவன்செயலாகிவிட அச்செயல்களுக்குரிய பயன் அவர்களைச் சாராது சிவத்தைச் சார்ந்து விடும். அங்ஙனம் செயல்களுக்குரிய பயன் அவர்களைச் சாராது விலகுவதால். ஆகாமியம் அவர்களுக்கு ஏறுவதில்லை. எடுத்த உடம்பு மூலமாகப் புசித்தே தொலைக்க வேண்டியதான பிராரத்துவ வினை, நிலையில்லாத அற்ப சுகத்தையே கூட்டும். உயிர், சிவத்தின் உண்மை நிலையை உணர்ந்து, பொல்லாத ஆணவ மலத்தாலும், கன்ம மாயாமலங்களாலும் உண்டாகிய உயிர்ச்சார்பு, பொருட் சார்புகளிலிருந்து நீங்கித் தன் முனைப்பின்றி, அருள்வயமாய் அடங்கி நிற்கும்போது சிவம் அவ்வுயிருடன் இரண்டறக் கலந்து நின்று, உயிரின் செயல் முழுதும் தன் செயலாம்படி வைக்கும். அப்போது பிராரத்துவ வினையால் விளையும் அற்ப சுகமாகிய சிற்றின்பமே, பேரின்பமாக அநுபவத்துக்கு வரும்,

உயிர்களுக்குப் பெத்தநிலை, முத்திநிலை என்று இரண்டு நிலைகள் உள்ளன, பெத்தத்தில் உயிர், மலத்தொடர்பினால் தனது இச்சாஞானக் கிரியைகள் அதன் வழிச் செல்ல அல்லலுற்றுத், தநு கரண புவன போகங்களைச் சார்ந்து, விருப்பு வெறுப்புக்களால் யான் எனது என்னும் அகங்கார மமகாரங்களைக் கொண்டு, துன்பத்தை அடைந்து, பிரபஞ்ச மயமாய்

நிற்கும், முத்தியில் உயிர், பிரபஞ்சம் முழுவதையும் ஒழித்துத் திருவருள் வசப்பட்டுத், தனக்கென ஒரு செயலுமின்றிச், சிவமேயாய் நிற்கும். பெத்தத்தில் உயிர், சிவத்தினது உபகாரத்தை மறந்திருக்கும். முத்தியில் உயிர் சிவத்தினது உபகாரத்தை அறிந்திருக்கும். சிவ உபகாரத்தை அறிந்த உயிர், தீப் பற்றிய கர்ப்பூரம், தன் வடிவத்தை இழந்து தீ வடிவமாய் விளங்குவது போலப் பசுத்துவம் நீங்கிச் சிவத்துவ விளக்கம் பெற்றுச் சிவமேயாய் ஒளிவிட்டு நிற்கும். தீப்பற்றிய கர்ப்பூரம் பின்னர், யாதொரு சார்புமில்லாமல், தன் வடிவம் முழுவதும் கரையப்பெற்று, ஆகாய வெளியில் கலந்து ஏகமாய் நிற்பது போலப், பின்னர் இவ்வுயிரும் பஞ்ச தேகங்களும் கரையப் பெற்று, யாதொரு பற்றுமின்றிப், பரமாகாசப் பெரு வெளியில் இரண்டறக் கலந்து, பேரின்பம் பெற்று விளங்கிக் கொண்டிருக்கும் இதனைத் தாயுமான அடிகள், ''தீதணையாக் கர்ப்பூர தீபமென நான்கண்ட, சோதியுடன் ஒன்றித் துரிசறுப்பதெந்நாளோ'' என அருளியிருப்பதால் அறியலாம் ஆன்மாவினது கருவி கரணங்கள் யாவும் பேரின்ப வயப்பட்டு நிகழும் போது, அக்கரணங்களின் வாயிலாகத் துய்க்கும் சிற்றின்பமும், பேரின்பமாகவே திகழும். ''காணும் கரணங்கள் எல்லாம் பேரின்பமெனப், பேணும் அடியார்'' என்பது மணிவாசகம்,

சிவமே தானாக நின்று செயல் செய்யும்போது, முக்கரணங்களாலும் செய்யப்பெறும் ஆகாமியமாகிய வினைப்பயன் உயிரைச் சார்ந்து ஏறமாட்டாது. அதனால் பந்தம் அறும்' பிராரத்துவம் உடலூழாய்க் கழிந்து போகப், பேரின்பமுத்தி, இப்பூவுலகத்திலேயே சித்திக்கும். இதனைச் சிவஞான சித்தியார் ''அங்கிலைமை இங்கிலையில் அடைந்த முறையாலே, மாயமெலாம் நீங்கியான் மலரடிக்கீழ் வைப்பன், மாறுத சிவாநுபவம் மருவிக்கொண்டே'' என விளக்குகின்றது. சாம்பராக இருந்த பூம்பாவை, ஆளுடைய பிள்ளையாரது அநுக்கிரகத்தால் அழகுக்கு எல்லையாகிய நல்லுடல் பெற்று எழுந்தபொழுது, பிள்ளையார் கண்ட காட்சியுண்மையை ''புண்ணி

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# அருள் மொழி அமுது

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,
3119, கீழ இரண்டாம் வீதி,
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.

## 32. அன்புருவானவர்க்கு அன்பு செய்தவர்.

திருச்சிற்றம்பலம்

திருவிளங்கு தென்னாட்டின் திலகமென எழில் கொண்டு ஓங்கும் சோழ மண்டலத்தில் இயற்கையாகவே மங்கலம் வாய்ந்த சாத்தமங்கை என்ற ஊர் ஒன்று உண்டு. திருமருகல் என்ற தலத்திற்கு அருகாமையிலுள்ளது இவ்வூர். பிரமனால் வந்திக்கப்பட்ட திருக்கோயிலானதால் அயவந்தி என்ற சிறப்புடைய பெயரால் திருக்கோயில் விளங்குகிறது இறைவனின் பெயர் அயவந்திநாதர் அம்மையின்பெயர் மலர்க்கண்ணி அம்மை. கார்கபத்யம், ஆகவனீயம், தக்ஷிணாக்கினி என்ற மூன்று விதமான வேள்வித்தீயை வேதமோதும் அந்தணர் வளர்க்க, அந்த தீயையே குளிரச் செய்யும், கற்பாகிய தீயை அந்நாட்டுப் பெண்மக்கள் வளர்த்தனர். அவ்வூரில் வேதத்தை உலகினருக்கு விவரித்துக் கூறும் நீலநக்கர் என்பவர் இருந்தார். சிவபெருமானையும் சிவனடியாரையும் வணங்கித் தொண்டு செய்வதே வேதத்தின் உட்பொருள் என்பதால் அவ்வாறே செய்தார்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

யப் பதினாருண்டு பேர் பெறும் புகலிவேந்தர், கண்ணுதல் கருணைவெள்ளம் ஆயிரம் முகத்தாற் கண்டார்'' என்று சேக்கிழார் பெருமான் அருளுவது. இங்கே நினைவு கூர்வதற் குரியதாகும்.

(தொடரும்)

வேத உள்ளுறை யாவன விரிபுனல் வேணி
நாதர் தம்மையும் அவரடியாரையும் நயந்து
பாதம் அர்ச்சனை புரிவதும் பணிவதும் என்றே
காதலால் அவை இரண்டுமே செய் கருத்துடையார்.

ஆகமம் அருச்சனை செய்யும் முறைகளைக் குறிக்கும். இன்று திருக்கோயில்களில் பூசனை புரியும் வகுப்பினர் ஆதிசைவர் எனப்படும் உயரிய வகுப்பினர். பிரமகுலத்தில் பிறந்து சிவ தீக்ஷைபெற்றவர் மகாசைவர் என்று அழைக்கப்பெறுபவர். திருநீலநக்கர் மகாசைவர். நீலநிறமுள்ள அம்மையை ஒரு புற முடைய சிவபெருமானுக்கு நீலநக்கர் எனப் பெயர். அப் பெயரை உடையவராய் விளங்கிய நாயனர் சிவனடியாருக்காக எவ்விதமான காரியங்களையும் செய்யக் கூடியவராயிருந்தார்.

திருவாதிரை நாளன்று வீட்டில் ஆன்மார்த்த பூசை முடித்து திருக்கோயிலுக்குச்சென்றூர். பூசைக்கான பொருள் களை குறைவிலாது கொண்டுவந்தார். மனைவியில்லாது சிவ பூசை செய்யக்கூடாது. என்பதால் மனைவியையும் அழைத்து வந்தனர்.

நெடிய வேதநூல் நிறைய ஆகமம்
முடிய ஓதிய முறையி னிற்கினும்
வடிவில் இல்லற வாழ்க்கை யின்றியே
அடிய ருச்சனைக் கருக னுவனே.

என்பது திருவிளையாடற் புராண முடையாரின் வாக்கு. அம்மையார் பூசனைப் பொருள்களை ஏந்தி நிற்க, நாயனர் பூசனை செய்யலானர். தற்செயலாக இறைவனின் மீது சுதைச் சிலம்பி யொன்று விழுந்தது. சிலந்தி உடம்பில் பட்டால் கொப்புளம் உண்டாகிவிடும். நயனரின் மனைவி இறைவன் மீது விழுந்த சிலம்பியை ஊதினர். அச்சிலம்பி இறைவனின் உடலில் தீங்கு விளைக்கு முன் நீக்க வேணுமென்ற நினைவில் ஊதினர். குழந்தைக்கு ஊறுநேர்ந்தால் நீக்கும் தாயின் பரிவு டன் செய்ததை நாயனர் உணராது, "ஏன் இவ்வாறு செய் தனை?" எனக் கேட்டார். "சிலந்தி நீங்குவதற்காக இவ்வாறு ஊதினேன்" என அம்மையார் கூறியதை மனங்கொள்ளாது, அம்மையை நீங்குவது எனத்தீர்மானித்தார்.

மனைவியார் செய்த அன்பினை மனத்தினிற் கொள்ளார்
புனையும் நூல்மணிமார்பர் தம் பூசனைத்திறத்தில்
"இனைய செய்கை இங்கனுசிதமாம்" எனஎண்ணும்
நினைவினுல் அவர் தம்மை விட்டகன்றிட நீப்பார்.

நாயனுர் அம்மையை விட்டு நீங்க நினைத்தாரே தவிர, அம்மை நீங்கமாட்டார் என்பது குறிப்பு.

இறைவன் மலமில்லாத விமலன். இறைவனைச் சிலந்தி என்ன செய்யும்? என நினைக்கவில்லை. இறைவனின் மீது எச்சில் பட்டுவிட்டதே என அன்பின் காரணமாக நினைந்தார் பரிசுத்தமே உருவான பகவானை எச்சில் ஒன்றும் செய்யாது என எண்ணமுடியாது அன்பு அவரை மறைத்தது அதனுல் மனைவியைக் கோயிலில் விட்டுவிட்டு, தன் வீடு சென்றுர். பஞ்சணையில் பள்ளி கொண்டார். அயவந்தி இறைவர் நாயனுரின் கனவில் தோன்றி "உன் மனைவி ஊதிய இடம் தவிர உடம்பு பூராவும் கொப்பளங்கள் உள்ளதைப்பார்" எனக் காட்டினுர்.

பள்ளி கொள்பொழுது அயவந்திப் பரமர் தம் கனவில்
வெள்ள நீர்ச்சடையொடு நின்று மேனியைக்காட்டி
"உள்ளம் வைத்தெமை ஊதிமுன் துமிந்த பால் ஒழியக்
கொள்ளும் இப்புறம் சிலம்பியின் கொப்புள்" என்றருள.

வெள்ள நீர்ச்சடை, கங்கையைத் தலையில்வைத்த கோலத்துடன் காட்சி தந்தார் கங்கை எதையுமே பரிசுத்தமாக்கிவிடும். அது கூடக் கொப்புளத்தை ஒழிக்கவில்லை அம்மையின் அன்பு நிறைந்த எச்சில் ஒழித்து விட்டது என்பது குறிப்பு. நான்காவது சாமக்கனவானதால், அதை நனவாக எண்ணினுர். கோயிலில் சென்று இறைவனை வணங்கி மனைவியை அழைத்து வந்தார். மனைவியின் பெருமையையும் இறையருளையும் எண்ணி வியந்தார். இவ்வாறு வாழும் நாளில் சம்பந்தப்பெருமானின் திருநிறைந்த புகழ் கேட்டு அவரை வணங்கி வாழலானுர். அந்நிலையில் சம்பந்தப்பெருமான் தனது அன்பர்களுடனும், தனக்கு யாழ்வாசிக்கும் திருநீலகண்டயாழ்ப்பாணர், அவரது மனைவி முதலானவருடன் சாத்தமங்கை வந்

தனர். நாயனார் மகிழ்ச்சியுடன் ஆடிப்பாடி அவர்களை எதிர் கொண்டு தமது மனையில் இருக்கச்செய்தார் இரவு அனைவருக்கும் விருந்து வைத்தார். பின்னர் சம்பந்தப் பெருமான் "திருநீலகண்டயாழ்ப்பாணர் தங்குவதற்குத் தக்க ஒரு இடம் கொடுக்கவேணும்" என்றனர்.

பாணர் தம் மனைவியுடன் வந்திருந்தார். அவரது பெருமையும் அடிமைத்திறமும், அவர்பால் தாம் கொண்ட அன்பினை திருநீலநக்கர் அறிந்தாரோ இல்லையோ என ஒரு ஐயப்பாடும் சம்பந்தப் பெருமானின் மனதில் இருந்திருக்கலாம். திருநீலநக்கர் வேதியராதலின் திருநீலகண்டயாழ்ப்பாணரிடம் தீண்டாமை பாராட்டிவிடுவாரோ எனக்கூட எண்ணியிருக்கலாம் எனவே அவருக்கு ஒரு நல்ல இடம் அளிக்க வேணுமென சம்பந்தப்பெருமான் கூறினார் எனத் தொனிப் பொருள் கொள்ளலாம்.

சம்பந்தப்பெருமானின் திருவுளம் அறிந்த திருநீலநக்கர் தமது மனையில் வேள்வித்தி வளர்க்குமிடத்தருகிலேயே திருநீலகண்டயாழ்ப்பாணர் இருக்க இடம் தந்தனர்.

இது குற்றமாயிருப்பின் வேள்வித்தீ அணைந்திருக்கும். ஆனால் வேள்வித்தி வலஞ்சுழித்து நன்கு பிரகாசித்தது. பாணர் தம் மனைவியுடன் அங்கு பள்ளி கொண்டார்.

ஆங்கு வேதியில் அருத செந்தீவலம் சுழிவுற்று
ஓங்கிமுன்னையில் ஒருபடித் தன்றியே ஒளிரத்
தாங்கு நூலவர் மகிழ்வுறச் சகோடயாழ்த்தலைவர்
பாங்கு பாணியா ருடன் அருளாற்பள்ளி கொண்டார்.

சாதி சமயச் சழக்குப் பேசி, ஒரு சாதியரைத் தள்ளி வைப்பது அநீதி என்பதை அழகொழுகக் காட்டுகிறார் அருள் மொழித்தேவர். தாழ்த்தப்பட்டவர் என ஒரு வகுப்பையே தங்களது நலனுக்காக இன்றைய நிலையில் சிலர் பட்டமளித்து வளர்த்து வருகின்றனரே தவிர. நம் முன்னோர்கள் எவரையும் தாழ்ந்தவராகக் கருதவில்லை என்பது கண்கூடு.

ஞானசம்பந்தர் போன்ற ஞானிகளுக்கு நம் போன்று தூக்கம் முதலிய அவத்தைகள் கிடையா. எனவே தூங்கினார்

எனக் கூறுது பள்ளிகொண்டார் என உபசார வழக்காகக் கூறினர்.

பொழுது விடிந்ததும் திருச்சாத்தமங்கைக் கோயிலுக்கு எழுந்தருளிய திருஞானசம்பந்தர் அயவந்தி நாதரைப் பாடும் போது,

சாத்தமங்கை அடிகள் நக்கன் பரவ அயவந்தி அமர்ந்தவனே என்றும்,
''நீலநக்கன் நெடுமா நகர் என்று தொண்டர் அறையுமூர் சாத்தமங்கை''

என்று திருநீலநக்க நாயனரைச் சிறப்பித்துப் பாடினர். பல இடங்களில் பதிகம் பாடிய சம்பந்தப்பெருமானே பழைய வேதங்களைப் புதிய தமிழில் பாடுபவர் என ஒரு திருநாமம் சூட்டியேஅழைக்கிறர், 'புதியசெந்தமிழ்ப் பழமறைமொழிந்த பூசுரனர்' (எ-று) கவிஞர்.

ஞானசம்பந்தப் பெருமானுடன்புறப்பட்ட திருநீலநக்கர் அவரது ஆணையை மறுக்க அஞ்சி, தனது உள்ளத்தை மாத்திரம் அவர் பின்னர் செல்ல அனுப்பி, தான் உடலளவிலே திருச்சாத்தமங்கை அடைந்தார்.

திருஞானசம்பந்தப் பெருமானை அடிக்கடி சென்று தொழுது வந்த திருநீலநக்கநாயனர், திருஞானசம்பந்தப் பெருமானது திருமணத்தன்று மறை விதிப்படி வேள்விச் சடங்குகள் செய்வித்து யாவருடனும் தானும் இறைவன் தாள் சேர்ந்தார்.

ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை திருநீலநக்கர்க்கு அடியேன்.

திருச்சிற்றம்பலம்

(தொடரும்)

# கடவுளை நம்பினோர் கைவிடப்படார்

**"The Ways of Providence are Mysterious"**

**வித்துவான் கோ. கோவிந்தசாமி அவர்கள்.**
தமிழாசிரியர், திருமுக்கூடல் (அஞ்சல்)
செங்கற்பட்டு மாவட்டம்.

மாலைநேரம், வெளியேசெல்லாமல் தன் இல்லத்திலேயே அமர்ந்திருந்த கந்தப்பனின் உள்ளம் மிகவும் அமைதியின்றித் தவித்தது. அவனுடைய அருமைமகன் குமார் இரண்டு நாட்களாகக் காய்ச்சலால் துன்புறுவதே அவன் மனம் அமைதியின்றி இருப்பதற்குக் காரணமாகும் மருத்துவர் ஒருவர் வந்து மருந்துகளைக் கொடுத்தும் பயனில்லை. காய்ச்சல் குறைந்தபாடில்லை. அதனால் மருத்துவர் அவனை அழைத்து கந்தப்பா என்றால் முடிந்ததைச் செய்துவிட்டேன். இந்த நச்சுக்காய்ச்சலைப் போக்குவதற்கு இன்னும் ஒரேஒரு மருந்து தான் உள்ளது. அது என்னிடம் இல்லை. மருந்தின் பெயரை எழுதித் தருகிறேன். அதை எப்படியாவது வாங்கிவா, இன்றிரவு பத்து மணிக்குள் இவனுக்குக் கொடுக்கவேண்டும். இல்லையேல் உன் மகனைக் காப்பாற்ற முடியாது. நான் பிறகு வருகிறேன் என்று கூறியவாறு ஏதோ ஒருமருந்தின் பெயரை எழுதி கந்தப்பனிடம் அளித்து விட்டுச் சென்றார்.

மருந்தைப் பெற்றுவரப் பணம் வேண்டும். நான்கு கல் தொலைவிலுள்ள நகர்ப்பகுதிக்குச் சென்று திரும்பவேண்டும். ஒருகாசுக்கும் வழியற்ற நான் என்ன செய்வேன் எப்படி மகனைக் காப்பாற்றுவேன் என்று குழம்பினான் கந்தப்பன்.

தன் குலதெய்வமான முருகன்தான் தன் மகனைக் காப்பாற்றவேண்டும். வேறு வழியே இல்லை எனக்கருதிய அவன் விரைவாக எழுந்து சிறிது தொலைவிலிருந்த முருகப்பெருமான் கோயிலை அடைந்தான்.

முருகா...என் ஒரே மகனை...என்னுடைய குலவிளக்கை நீதான் காப்பாற்றவேண்டும். வறுமையில் வாடும் நான் வாழ்

வில் வளம் பல பெற்று இன்புற இயலாத நான், ஆதரிப்பார் எவருமின்றி ஏழ்மையில் உழலும் நான் உன்னிடம் பொன் கேட்கவில்லை, பொருள் கேட்கவில்லை என்மகன் நலமுடன் எழ அருள்புரிய வேண்டுகிறேன். இந்த ஒருவரத்தை மட்டும் எனக்குக் கொடு......முருகா......... உன்னை நம்பியிருக்கும் என்னைக் கைவிட்டுவிடாதே நீதான்எனக்குத்துணை. உன்னைத் தவிர என் குழந்தையைக் காப்பவர் எவருமில்லை. முருகா... அருள் புரிவாய் செந்தில் வேலா என் மகனைக் காத்தருள்வாய். முருகா...முருகா எனக்கதறித் தன்மனம் மொழி மெய்களால் வேண்டினான். மீண்டும் தன் இல்லம் சென்று தன் மகனை யும், மகனருகே சோகமே உருவாக அமர்ந்திருந்த மனைவி கற்பகத்தையும் நோக்கினான்.

கற்பகம்! நான் நகர்ப்புறம் சென்று வருகிறேன். மகன் குமாரை நன்கு கவனித்துக்கொள் என்றான்.

சீக்கிரம் வந்து விடுங்கள். மருத்துவர் சொன்னதைக் கேட்டீர்களா? இரவு பத்து மணிக்குள் மருந்தைத் தராவிடில் நாம் நம் மகனை இழக்கவேண்டியநிலை ஏற்பட்டுவிடும் என்று கூறிவிட்டார். எப்பாடுபட்டாவது மருந்தைப்பெற்று விரை வாகத் திரும்பி வாருங்கள். நம் குழந்தையைக் காப்பாற்றுங் கள் என்றாள் கற்பகம். அவள் விழிகளில் நீர்ப்பெருக்கெடுத் தோடியது.

கற்பகம்... வருந்தாதே... முருகப்பெருமான் நம்மைக் கைவிடமாட்டார். எப்படியும் மருந்து கிடைக்குமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது நான் சென்று விரைவில் திரும்பி வருகிறேன். எனக் கூறியவாறு ஆதனூர் நகர்ப்பகு தியை நோக்கிச் சென்றான்.

கடவுளைநம்பினோர் கைவிடப்படார் என்கிறார்கள். நான் முருகப்பெருமானையே நம்பியுள்ளேன். அந்த ஆண்டவன் என் குறையைப் போக்கி அருள்புரிவாரா...... ஆண்டவன் இருப்பது உண்மையானால் என்மகன் நலமுடன் எழுந்து நட மாட மருந்து கிடைக்கவேண்டும். முருகா...உன்னையே நம்பி யிருக்கும் என்னைக் கைவிடாதே.

இவ்விதம் மனதிற்குள் கூறியவாறு சென்று கொண்டிருந்தான் கந்தப்பன்.

அவன் சென்றுகொண்டிருந்த சாலையில் பெருந்துவண்டிகளும், கார்களும், மிதிவண்டிகளும், கைவண்டிகளும்விரைந்து வருவதும் போவதுமாக இருந்தன.

ஓரிடத்தில் சிறிதுநேரம் நின்று சாலையைக்கடந்து செல்ல எண்ணினான். அப்போது......

மிகவிரைவாகக் கார் ஒன்று வந்துகொண்டிருந்தது அது வருவதைக் கவனியாது ஓர் குழந்தை சாலையின் நடுவில்நின்று கொண்டிருந்தது. கார் நெருங்கிவிட்டது. குழந்தை அதைத் திரும்பியும் பார்க்காமல் வேறு திசையை நோக்கியவண்ணமிருந்தது.

தற்செயலாகக் குழந்தையையும். அக்குழந்தையைக்கொல்லக் காலனைப்போல் விரைந்து வரும் காரையும் கவனித்தான் கந்தப்பன். குழந்தையைக் காக்கவேண்டுமென அவனுடைய உள்ளமும் உடலும் துடித்தன. சுற்றுப்புறத்தை மறந்த அவன் அருகில் யாராவது இருக்கிறார்களா என்பதையும்கவனியாமல் குழந்தை இருக்குமிடத்திற்கு ஓடி அக்குழந்தையைத் தூக்கிக்கொண்டான். எனினும் விரைந்து வந்தகார் அவன் மீது உராய்ந்தவாறு திடீரென்று நின்றது. காரோட்டி திறமைசாலியானதால் கந்தப்பனுக்குக் காயம் ஏற்படாதவாறு காரை நிறுத்திவிட்டான்.

கந்தப்பன் ஒருவிநாடி தாமதித்திருப்பினும் குழந்தையின் உயிர் உடலைவிட்டுப் பிரிந்து சென்றிருக்கும். எப்படியோ குழந்தையைக் காப்பாற்றிவிட்டோம் என அவன் ஆறுதல் அடைந்தான்.

சிறிதுதொலைவில் நின்றிருந்த குழந்தையின் பெற்றோர் உடலும் உள்ளமும் பதறத் தம் குழந்தையினருகே ஓடி வந்தனர். குழந்தைக்கு எவ்விதத் தீங்குமில்லை என அறிந்தபிறகு மன ஆறுதல் பெற்றனர்.

காரோட்டி அவர்களை நோக்கி...குழந்தையை இப்படியா சாலையில் விடுவது. இவர் இல்லாமலிருந்தால் குழந்தையின் கதி என்னவாயிருக்கும். இனியாவது குழந்தையைச் சாலையின் நடுவில் விடாமலிருங்க... எனக் கூறியவாறு காரைச் செலுத்திச் சென்றுவிட்டான்.

குழந்தையின் தந்தை கந்தப்பனருகே வந்து...ஐயா... உங்கள் உயிரையும் பொருட்படுத்தாது என் குழந்தையைக் காப்பாற்றிவிட்டீர்கள். இல்லையேல் என்னுடைய ஒரே குழந்தையை நான் இழந்துவிட்டிருப்பேன். குழந்தையைக் காத்த உங்களுக்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறேன். இதோ நான் தருவதை மறுக்காமல் பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூறி நூறு ரூபாய்த்தாள் ஒன்றை அவனிடம் நீட்டினார்.

பணமா... வேண்டாம் ஐயா மனிதத் தன்மையுள்ள எவரும் இந்த உதவியைச் செய்தே தீருவர். குழந்தையைக் காப்பாற்றிய மகிழ்ச்சி ஒன்றே எனக்குப்போதும். பணம்தேவையில்லை என்றான் கந்தப்பன்.

உதவியைச் செய்து பலனை எதிர்பார்க்கும் இக்காலத்தில் பலனை எதிர்பார்க்காமல் உதவிபுரிய விரும்பும் நீர் உத்தமர் தான். உங்களுடைய மனைவி மக்களுடன் நீங்கள் நலமாக வாழ்வீர்கள் என்ற குழந்தையின்தந்தை நான்தரும் பணத்தை ஏற்கவிரும்பாவிடில் வேறு எதுவேண்டுமாயினும் கேளுங்கள் தருகிறேன் நீங்கள் ஏதாவது பெற்றுத்தாணுகவேண்டும். அப்போதுதான் எனக்கு மகிழ்ச்சி ஏற்படும் என்றார்.

கந்தப்பன் தன் குழந்தையை நினைத்தான். அவனுடைய காய்ச்சல் எப்படியிருக்கிறதோ என எண்ணினான். அவன் கண்கள் நீரைப் பொழிந்தன.

ஏன் கண்கலங்குகிறீர்கள் என்றார் குழந்தையின் தந்தை.

ஒன்றுமில்லை... எனக்கூறியவாறு கண்ணீரைத் துடைத்துக்கொண்ட கந்தப்பன்...நீங்கள்ஏதேனும்பெற்றுக்கொண்டு தாணுக வேண்டுமென வற்புறுத்தினீர்கள். அதனால் ஒன்றைக்

கேட்கிறேன். என் ஒரே மகன் காய்ச்சலால் துன்புறுகிறுன். அவனுக்கு உடனடியாக மருந்து அளிக்க வேண்டும். இல்லே யேல் பிழைக்கமாட்டான் என்று மருத்துவர் கூறிவிட்டார். மருந்தை வாங்கித்தந்தால்போதும் பணம் எனக்குவேண்டாம் என்றுகூறி மருந்தின் பெயர் எழுதிய சீட்டை அவரிடம் அளித்தான்.

குழந்தையின் தந்தை அதைப் படித்துப் பார்த்துவிட்டுச் சீட்டின்பின்புறம் ஏதோஎழுதி அதைக் கந்தப்பனிடம் அளித் தார். இதை எடுத்துச் சென்று நகர்ப்பகுதியிலுள்ள மருந்து விற்பனே நிலேயத்தில் கொடுத்தால் உடனே மருந்தைத் தரு வார்கள். பெற்றுச்சென்று மகனேக் காப்பாற்றுங்கள். உங் களுக்கு ஒருகுறையும் ஏற்படாது நோயால் வருந்தும் மகன் நலமாக எழுந்திருப்பான் எனக்கூறி அவனே அனுப்பினுர்.

விரைந்து சென்ற கந்தப்பன்... முருகா என்தெய்வமே எல்லாம் உன்செயல்... எனக்கூறி மகிழ்ந்தவாறு நகர்ப்பகு தியை அடைந்தான்.

மருந்து விற்பனேசெய்யும் கடையருகே சென்று சீட்டை விற்பனே செய்பவரிடம் கொடுத்தான்.

ஐயா சீக்கிரம் மருந்தைக் கொடுங்கள் காய்ச்சலால் துன் புறும் என் மகனுக்கு உடனே அளிக்கவேண்டும் என்ருன். சீட்டைக் கவனித்த விற்பனேயாளர் சீட்டின் பின்புறம் எழுதி யிருப்பது என்னவென்பதையும் கவனித்துவிட்டு உட்புறம் சென்று மருந்துடன் திரும்பிவந்து...இதோ மருந்து பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறிமருந்தை அவனிடம் அளித்தார்.

மருந்தைப் பெற்ற கந்தப்பன் சிறிது தயங்கி நின்ருன். அவனுடைய, தயக்கத்தைப் புரிந்துகொண்ட விற்பனேயாளர் என்ன சிந்திக்கிறீர்கள் சீட்டின் பின்புறம் எழுதியிருப்பவர் யாராக இருக்கும் என்றுதானே... இந்தக் கடையின் உரிமை யாளரே அவர்தான்... அதனுல்தான் நானும் உங்களிடம் பணம் கேட்கவில்லே என்ருன் விற்பனேயாளர்.

தான் யாரென்று கூருமலேயே மருந்தைப்பெற உதவி செய்தவரை எண்ணியவாறு அங்கிருந்துஅகன்ருன் கந்தப்பன் அவன் மிகவிரைவாகச் செல்ல வேண்டுமென்பதை அவனுக்கு

உணர்த்துவது போன்று எங்கோ இருந்த கடிகாரம் எட்டு முறை மணியை அடித்து ஒலியை எழுப்பியது. இன்னும் இரண்டுமணிநேரம் இருக்கிறது அதற்குள் சென்றுவிடவேண்டும் என்று கருதி நடந்தான்.

எங்கும் ஒரே இருள். எதிரே வருபவர் யார் என்றும் தெரியாத அளவிற்குக் காரிருள் சூழ்ந்திருந்தது இருளில் விளக்கின்றி எப்படிச் செல்வது. எனச் சிந்தித்த கந்தப்பன் மேலும் நடக்க இயலாது சிலநிமிடங்கள் நின்றான். அதே சமயம் மிதிவண்டியில் வந்த ஒருவன் அவனருகேவந்து கந்தப்பா என்றான். யார் நீங்கள்... இந்த இருளில் எவரையும் தெரிந்து கொள்ள முடியவில்லை என்றான் கந்தப்பன்.

என்னை உனக்குத் தெரியாது. நான் உன்னை அறிந்திருக்கிறேன். நீகுழந்தைக்கு மருந்துவாங்க வந்து திரும்பிச்செல்ல இயலாமல் தவிக்கிறாய் என்பதை அறிவேன். இதோ இந்த மிதிவண்டியைப் பெற்றுக்கொள். வண்டியிலுள்ள விளக்கின் மூலம் நீ விரைந்து செல்லலாம். நாளை நானே உன் இல்லம் வந்து மிதிவண்டியைப்பெற்றுக்கொள்கிறேன். சீக்கிரம் புறப்படு உன்குழந்தையைக்காப்பாற்று என்றான்இருளில்வந்தவன்.

திகைப்புடனிருந்த கந்தப்பன் சில விநாடிகளுக்குப்பின் திகைப்பு நீங்கி அறிமுகமற்றவர் அளித்த மிதிவண்டியைப் பெற்று அதன் மூலம் தன் இல்லம் சென்றான்.

குறித்த நேரத்தில் மகனுக்கு மருந்தை அளித்ததனால் மகனுடைய காய்ச்சல் அகன்றது அவன் நலம் பெற்றான்.

தான் யாரென்று கூறாமலேயே மருந்தை அளித்துதவிய மருந்து விற்பனை உரிமையாளரை மட்டுமன்றி, அறிமுகமற்ற ஒருவர் மிதிவண்டியை அளித்துதவிய செயலையும் நினைத்தான். அவர்கள் செய்த உதவியைச் சிறிய உதவியாக எண்ணிவிட அவனால் இயலவில்லை. பேருதவியாகவே அவன் கருதினான். அவர்கள் மூலம் முருகப்பெருமானே தனக்கு உதவி புரிந்துள்ளார் என எண்ணிய அவன்...முருகா முருகா என்று முருகப்பெருமானைப் போற்றி வழிபட்டான்.

———

448

# அலங்கார நாயகன் 23

திருமதி ஆர். பார்வதிஅம்மாள் அவர்கள்,
தமிழாசிரியை, நாமக்கல்.

## கோழிக் கொடியோன் அருள்

உடம்பு இருந்தும் இல்லாதது போன்ற நிலையை, கருவி கரணங்கள் கழன்று உடம்பின் வாசனை எல்லாம் போய், புளியம்பழமும் தோடும் ஒட்டாமல் இருப்பது போன்ற அநுபவ நிலையை அருணகிரிநாதர் முன்பாட்டில் சொன்னார். 'இறந்தே விட்டது இவ்வுடம்பே' என்று முடித்த அவருக்கு உடம்பை விட்டு இறந்தே போகின்ற மக்களைப் பற்றிய நினைவு வந்தது. வந்தவுடன் இரக்கம் பிறந்தது.

உடம்பை விட்டுச் செல்ல வேண்டிய மக்கள் உடம்பு இருக்கும் பொழுதே நிச்சயமாக உயிர் உடம்பை விட்டுப் போகப் போகிறதென்று உணர்ந்து அதனிடம் உள்ள பற்றை அகற்றிவிட்டால் ஒரு விதமான துன்பமும் இல்லை. உடம்பினிடம் உள்ள பற்றை விடுவது இருக்கட்டும், உடம்பினால் உழைத்துச் சேமித்து வைத்துள்ள பொருள்களிடம் கொண்டுள்ள பற்றையே விடமுடியவில்லையே, இந்த நினைவு அருணகிரியாருக்கு வரவே சிறிது கோபம் உண்டாயிற்று. பொருளின் மேல் அழுத்தமான பற்றை உடையவர்களைப் பார்த்து "மதியிலிகாள்" என்று அழைக்கிறார். பின்பு இரக்கம் வருகிறது. பணத்தைச் சேர்த்து வைத்துக்கொண்டு வாழத் தெரியாமல் இருக்கிறீர்களே என்று இரக்கப்படுகிறார்.

"கோழிக் கொடியன் அடிபணி யாமல் குவலயத்தே
வாழக் கருதும் மதியிலிகாள்! உங்கள் வல்வினை நோய்
ஊழிற் பெருவலி உண்ண ஒட்டாது! உங்கள் அத்தம் எல்லாம்
ஆழப் புதைத்து வைத் தால்வரு மோதும் அடிப் பிறகே"

வாழ்வதற்குப் பொருள் அவசியம் என்று உலகம்சொல்கிறது. அருணகிரிநாதரோ அருள் அவசியம் என்று சொல்கிறார். கோழிக் கொடியனுடைய அடியைப் பணிந்து அருள்பெற்றால்

இந்தக் குவலயத்தில் வாழலாம், அப்படி வாழத் தெரிந்துக் கொள்ளாதவர்கள் மதியிலிகள் என்பது அவர்கருத்து.

புறத்திருளை நீக்கப் புணரியில் எழும் சூரியனது வர வுணர்த்தி சேவல் இன்பத்தை நல்கும், அகத்திருளைநீக்க அருள் ஆழியில் எழும் குகப் பிரம்மமாம் ஞான சூரியனைக் கூவி யழைத்து அச்சுர ஞானபானுவின் வரவுணர்த்திபேரின்பத்தை வழங்கும் நாதசொரூபியாக எம்பிரான் கொடியிலுள்ளசேவல் விளங்குகிறது. கோழிக் கொடியைப் பிடித்தகரம் முருகனின் திருக்கரம். அந்தக் கோழிக்கொடி முருகனது திருக்கரத்தின் நினைவை உண்டாக்கி அப்பெருமான் பாதத்தில் புகவேண்டும் என்ற நினைவையும் உண்டாக்கிவிடும்.

> ''கோழிக் கொடியன் அடிபணி யாமல் குவலயத்தே
> வாழக் கருதும் மதியிலி காள்''

முருகப்பெருமானது திருவடித் தாமரையை வணங்குவதே அறிவுடைமையாகும். அறிவு பெற்றதன் பயன் இறைவனை வழிபடுவதே, இறைவனை அறியும் அறிவே மெய்யறிவு. அந்த அறிவு பெறுதவர்கள் அறிவிலிகளே,

> ''அவனுடைய அறிவெல்லாம் எமையறியும் அறிவே''

என்று பெரியபுராணத்தில் வரும் சிவபிரான் திருவாக்கை நோக்குக,

> ''பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
> செம்பொருள் காண்ப தறிவு'' திருக்குறள்

கோழிக்கொடியனைப் பணிவதால் வருவது அருள். வாணியம் முதலியவற்றல் வருவது பொருள். பொருள் இருந்தால் போதாது. அருள்இல்லாவிட்டால் இவ்வுலகில்வாழமுடியாது.

> ''அருள் இலார்க்கு அவ்வுலகம் இல்லை, பொருளில்லார்க்
> கிவ்வுலகம் இல்லாகி யாங்கு'' திருக்குறள்

அருளும் பொருளும் உடையவன் இம்மையும் மறுமையும் நல்வாழ்வு பெறுவான். அருள் தரும் முருகனைப் பணிந்து வாழவேண்டும். அவன் திருவடிகளைப் பணியாமல் வாழ்ந்து விடலாம் என நினைக்கின்ற மதி அற்றவர்களே நீங்கள் நினைப் பது முடியாதகாரியம் என அறிவுறுத்துகிறர் அருணைமுனிவர்.

பொருள் ஈட்டுவதற்கு ஒரு ஊழ், அதனைத் துய்ப்பதற்கு ஒரு ஊழ், சிலர் ஓயாமல் உழைத்துப் பொருளை ஈட்டி அதனைச் சிறிதும் அனுபவிக்காமல் பொருள் காக்கும் பூதம்போல் காத்திருந்து வீணே மடிவர், பனியால் வாடுபவன் ஓயாமல் சருகு தேடிக் குளிர் காயாமல் உழல்வது போலாகும் ஊழின் வலி உண்ணவொட்டாமல் நகைக்கின்றது.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்" திருக்குறள்

பண்டைக் காலத்தில் காகித நாணயங்கள் இல்லாமையாலும் சேமநிதி நிலையங்கள் இன்மையாலும் செல்வங்களைப் புதைத்து வைப்பது வழக்கமாக இருந்தது.

"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் கூடுவிட்டிங்கு
ஆவிதான் போயினபின் யாரே அனுபவிப்பர்
பாவிகாள் அந்தப் பணம்" ஔவை

"தீதுற்ற செல்வமென் தேடிப் புதைத்த திரவியமென்" பட்டினத்தடிகள்

"தேடிப் புதைத்துத் திருட்டிற் கொடுத்துத் திகைத்திளைத்து
வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்குமாய்ப்பவரே" அருணகிரிநாதர்

மரண யாத்திரை போகுங்கால் தேடிப் புதைத்த செல்வம் உடன் தொடர்ந்து செல்வதில்லை,

"அத்தமும் வாழ்வும் அகத்து மட்டே விழியம் பொழுக
மெத்திய மாதரும் வீதி மட்டே"

என்ற பட்டினத்தடிகள் திருவாக்கையும் நோக்குக, நாம் செய்ததருமமே தொடர்ந்துவந்து மறுபிறப்பில்உதவிசெய்யும்

கோழியைக் கொடியாகக் கொண்ட முருகனுடைய திருவடியைப் பணிந்து அவன் அருளைச் சேமிக்காமல் உலகில் நன்ருக வாழ எண்ணும் அறிவில்லாத மக்களே உங்கள் தீவினை நோய் ஆகிய விதியிலே பெரு வலிமையையுடைய பகுதி நீங்கள் சேமித்த பொருளை உண்ணும்படி உங்களைவிடாது. நீங்கள் உண்ண முடியாமல் இருக்கும் உங்கள் பொருள் எல்லாவற்றையும், நிலத்தில் ஆழமாகப் புதைத்து வைத்தால் அவை நீங்கள் இறந்த பிறகு உங்கள் அடிக்குப் பிறகே உங்களைப்

பின்பற்றி வருமா? இந்தப் பாட்டுக்கு மறுதலையான குறிப்பை ஆராய்ந்தால் கோழிக்கொடியன் அடிபணிந்தால் குவலயத்தே வாழலாம், சேமிக்கும் பொருளை உண்ணலாம் புதைத்து வைக்காமல் பிறருக்கும் கொடுக்கலாம். அதன் பயனாக வினையும் புண்ணியம் தொடர்ந்துவரும் என்றபொருள்கிடைக்கும்.

"கோழிக் கொடியன் அடிபணியாமற் குவலயத்தே
வாழக் கருது மதியிலி காளுங்கள் வல்வினை நோய்
ஊழிற் பெருவலி யுண்ணவொட் டாதுங்க ளத்தமெல்லாம்
ஆழப் புதைத்து வைத்தால்வரு மோநும் மடிப்பிறகே".

---

## அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அறிவிப்பு

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையினர் இலக்கியச் சுற்று என்றவொரு சொற்பொழிவு வட்டத்தை இவ்வாண்டு தொடங்கியிருக்கின்றனர். தமிழுக்குத் தொண்டுசெய்த இலக்கியப் பெருமக்களைப் பற்றி இத்தொடர் சொற்பொழிவுகள் திங்கள் தோறும் நடைபெறும். இலக்கியச்சுற்றின் முதற் சொற்பொழிவுகள் 3—8—76, ஆளவை மன்றத்தில் தமிழ்ப்பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றன. மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் தம் ஆசிரியப் பெருந்தகையான தமிழ்த்தந்தை உ.வே.சாமிநாதஐயர் அவர்களின்உழைப்பு, மாணவர்கள்மேல் கொண்ட பற்று, தம் ஆசிரியர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையைப் போற்றிய பண்பு என்பன பற்றிய பல புதிய வாழ்க்கைக் குறிப்புக்களை எடுத்துக்கூறினர். திரு. அ. ஞானப்பிரகாசம் மணிமேகலைக் காப்பியம்படைத்த சாத்தனாரின்பாத்திரப்படைப்பு சமயநோக்கம் என்றிவற்றை மேல்நாட்டுக் காப்பியங்களோடு ஒப்பிட்டுக் காட்டினார். தலைவர், தம் முடிவுரையில், டாக்டர் உ. வே. சா. வின் என்றும் மறக்கஇயலா அடிப்படைத் தொண்டுகளையும், சாத்தனாரின் நிலையான சீர்திருத்த இயக்கங்களையும் புலப்படுத்தினார். திரு. வெ. செயராமன் நன்றி கூறினார். இக்கூட்டத்திற்குப் பல்துறை மாணவர்களும் இலக்கிய அன்பர்களும் திரளாக வந்திருந்தனர்.

# ஞானசம்பந்தரும் நற்றமிழும்

தத்புருஷ தேவநாம
திரு, சு இராமலிங்கம் அவர்கள்,
கணித ஜோதிடர், ஸ்ரீ மாணிக்கவாசகர் இல்லம்
சிகம்பட்டி, K. புதுப்பட்டி P.o
இலாலாப்பேட்டை வழி, திருச்சி ஜில்லா

7–வது பாசுரம்: கோயில்

திருச்சிற்றம்பலம்
அலையார் புனல்சூடி யாகத்தொரு பாகம்
மலையான் மகளோடு மகிழ்ந் தானுலகேத்தச்
சிலையா லெயிலெய்தான் சிற்றம்பலந் தன்னைத்
தலையால் வணங்குவார் தலையா னார்களே.
திருச்சிற்றம்பலம்

ஆறுவது திருப்பாசுரத்திலே மெய்த் தெய்வம் இதுவென்று அறியாது அவமே திரிகின்ற அறிவிலிகளுக்கு மெய்த்தெய்வஞ் சிவபெருமானே என்று உணர்த்தியருளிய திருஞானசம்பந்த சுவாமிகள் ஏழாவதாகிய இந்தத் திருப்பாசுரத்திலே, பெரியவர்கள் யார்? சிறியவர்கள் யார்? என்று தெரியாது சிறியவர்களைப் பெரியவர்களென்றும். பெரியவர்களைச் சிறியவர்களென்றும், மயங்கி மதித்துக் கெடுகின்ற வீணர்களுக்கு, பெரியவர்கள் இவர் என்று உணர்த்துகின்றார் பெரியவராகிய முத்தமிழ் வித்தகர் சிறியவர்களைப் பெரியவர்களென்றெண்ணி பெரியவர்களுக்குச் செய்யும் மரியாதைகளைச் செய்பவன் அவனுங் கெட்டுவிடுவான் அவனைச் சேர்ந்தோர்களும் கெட்டுவிடுவார்கள் இதற்குப் பிரமாணம், கந்தபுராணத்திலே ததீசி முனிவர் கூறுகிறார் கேளுங்கள்,

"அவ்வுரை கொடியோன் கூற அருந்தவ முனிவன் கேளா
எவ்வமீதுரைத்தாய் மேலாய் யாவரும் புகழநின்ற

செவ்வியர் தமையிழித்துச் சிறியரை உயர்ச்சி செய்தல்
உய்வகை அன்ருல் நும்மாருயிர்க் கெலாமுடி வீதென்ருன்,

என்னும் பாடலால் தெளியலாம். தெளியவே உலகத்திலே, அழிந்துபோகின்ற செல்வமுடையவர்களைப் பெரியவர்களென்றும், உத்தியோகமுடையவர்களைப் பெரியவர்களென்றும், நரிக்குப் பொதிசோருயிருக்கின்ற சரீரம் பருத்துயர்ந்தவர்களைப் பெரியவர்களென்றும், வாழ்நாளெல்லாம் வீழ்நாளகக் கழித்து வயது மூத்திருக்கிற நரைமயிருடையவர்களைப் பெரியவர்களென்றும் உயர்குலத்திலே பிறந்தும், உயர்ந்த காரியங்களைச் செய்யாது இழிந்த காரியங்களைச் செய்து திரிகின்றவர்களையும், குலத்தின் மேன்மைபற்றி அவர்களைப் பெரியவர்களென்றும், இப்படி உலகமானது உண்மையறியாமல்சிறியவர்களைப் பெரியவர்களென்றெண்ணி கெட்டொழிகின்றது,உண்மையில் யார் பேரியவர்கள் என்று பெரியவர்கள் திருவாக்கிஞலே கேட்டு அதன்படி அந்தப் பெரியவர்களை வணங்கி உபசாரஞ் செய்து உய்தி பெறுபவர்களே உண்மையறிவுடையவர்களாவார்கள் அல்லாதவர்கள், பொய்யறிவு உடையவர்களாவார்கள். திருநாவுக்கரசு சுவாமிகள் திருக்குறுந்தொகையிலே, அருளுகிருர் கவனியுங்கள்.

திருச்சிற்றம்பலம்

அனுசயப்பட்டு அது இது வென்னுதே
கனிமனத்தொடு கண்களும் நீர்மல்கி
புனிதனைப்பூவ னூரனைப் போற்றுவார்
மனிதரில் தலையான மனிதரே.

திருச்சிற்றம்பலம்

மனம் உருகி கண்களில் நீர்பெருக சிவபெருமானை போற்றுபவர் யாரோ, அவர்தான் மனிதரில் தலையான மனிதரெனப்படும் பெரியவராவார். என்று அருளுகிருர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவானைக்காத் தேவாரத்திலே, சிவபெருமானை அன்புடன் யார் அவனடி சேர்கின்ருர்களோ அவர்கள் எம்மையும் ஆளுகின்ற தலைவராவார். என்று அருளுகின்ருர், "இறைவன் என்றடி சேர்வார் அவர் எம்மையும் ஆளுடையாரே என்றும், ஆளுடையவடிகளாகிய மாணிக்கவாசகசுவா

மிகள். அற்புதமான கருத்தையருளுகிறார். என்னெனில், உலகிலே உண்மையாக வாழ்பவர்களும், வல்வினையை ஒழித்தவர்களும், உலகமெல்லாம் பணிந்து ஏத்த தகுந்த பெரியவர் யாரென்னில் திருப்பெருந்துறைப் பெருமானை சிவாகம முறையில் ஏத்தி வழிபடுவர் யாரோ அவரே அந்தப் பெரியவர் என்கிறார் அப்பாடல் வருமாறு,

வாழ்ந்தார்கள் ஆவாரும் வல்வினையை மாய்ப்பாரும்
தாழ்ந்துலகம் ஏத்தத் தகுவாரும்: சூழ்ந்தமரர்
சென்றிறைஞ்சி யேத்தும் திருவார் பெருந்துறையை
நன்றிறைஞ்சி யேத்து நமர்.

என்பதால் தெளியலாம். தாயுமான சுவாமிகள், மிகத் தெளிவாகக் கூறுகிறார். நெஞ்சமே ஏன் மயக்கமடைகிறாய் சிவபெருமானுடைய திருவருள் பெற்றவர் யாரோ அவர்கள்தான் பெரியவர்கள். இக்கருத்து முற்றுமுணர்ந்த பெரியோர்கள் கூறிய முதுமொழி என்று அருளுகிறார். இதோ அப்பாடல்,

மற்றுனக்கு மயக்கமென்வன் னெஞ்சே
கற்றைவார் சடைக் கண்ணுத லோனருள்
பெற்ற பேரவரே பெரியோ ரெலாம்
முற்றுணர்ந்தவர் முதுரை யர்த்தமே.

என்பதால் விளங்கும். ஒரு வனத்திலே அத்திரி ஆங்கீரசர், புலத்தியர், கண்ணுவர், மார்க்கண்டேயர் முதலிய பலமகரிஷிகள் கூடியிருந்தார்கள் அப்போது அவ்வனத்தையடுத்தபட்டணத்தில் அரசன் தன்னுடைய குமாரனுக்கு பட்டஞ்சூட்டி முனிவர்களிடத்திலே ஆசிர்வாதம்பெற புத்திரனைசேனைகளோடும் அனுப்பி அதற்கு முன்பே முனிவர்களுக்குச் சொல்லியனுப்பினான். முனிவர்கள் வருகிறஅரசனுக்கு மங்கலவாழ்த்து நம்மிலே யார் முதலிலே சொல்லுவது, என்று ஆலோசித்து மிக இளவயதுடையவராகிய மார்க்கண்டேயரே முதலில்ஆசி கூற வேண்டும் என்று கூறினார்கள். அப்போது மார்க்கண்டேயர் வயதில் மூத்த மிகப் பெரியவர்களான நீங்கள் இருக்க, மிகச் சிறிய வயதுடைய என்னை ஆசி கூறும்படி கூறுகிறீர்களே. என்று கூறினார். பழங்கிழங்களாகிய அம்முனிவர் கூட்டம் மார்க்கண்டேயரைப்பார்த்து நாங்களெல்லாம்உடல்

வயதிலே பெரியவர்களாயும், தவவயதிலே சிறியவர்களாயும் உள்ளோம். தாங்களோ உடல் வயதில் சிறியவராயும் பிறந்து மொழி பயின்ற பின்னெலாம் சிவபெருமான் திருவடிக்கே காதல் சிறந்து, இமைப்போதும் மறவாத தவ வயதிலே பெரியவராகவும் இருக்கிறபடியால் தாங்களே உண்மையில் பெரியவர் அதனால் தாங்களே முதலில் ஆசீர்வாதம் செய்யவேண்டுமென வேண்ட அவ்வாறே செய்தருளினர் இதிலிருந்து யார் பெரியவர்களென்று தெளிந்து கொள்ளலாம். இதனால்தான் அரசராகிய அதிவீரராம பாண்டியர், சிறியோரெல்லாம்சிறியருமல்லர், பெரியோரெல்லாம் பெரியோருமல்லர் என்றியம்பினர் ஔவைப்பிராட்டியும், முருகப் பெருமானிடம் பெரிதுபெரிது புவனம் பெரிதென்று தொடங்கி கடைசியாக தொண்டர் தம் பெருமை சொல்லவும், பெரிதே என்றருளினர் இதுகாறுங் கூறியவாற்றால், சிவபெருமானே மெய்த் தெய்வமென்று தெளிந்து அவன் திருவடியை தலையால் வணங்குபவர்களே, தலைவர் எனப்படும் பெரியவர்களாவார்கள் அல்லாதவர்கள் செல்வம் முதலிய எவ்வகையில் பெரியவராயினும் அவர்கள் சிறியவர்களே என்பதில் சிறிதுஞ் சந்தேகமில்லை. இதற்குப் பிரமாணம் நக்கீரதேவர் பதினோருந்திருமுறையில்,

> உலகமனைத்தினுக்கும் ஒண்ணுதல் மேலிட்ட
> திலகமெனப் பெறினுஞ் சீசீ இலகியசீர்
> ஈசாதிருக்கயிலை எம்பெருமானென்றென்றே
> பேசா திருப்பார் பிறப்பு.

என்று அருளுகிறார். தலை பெற்ற பயன் எல்லாருக்கும் தலைவனை சிவபெருமான் திருவடியை வணங்குவதற்கேயாம் செவிட்டுக் காதினாலும் குருட்டுக் கண்ணினாலும், பயனில்லாதது போல வணங்காத தலையினாலும் பயனில்லையாம். இதற்குப் பிரமாணம் திருக்குறள் கடவுள் வாழ்த்திலே.

> கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
> தாளை வணங்காத் தலை.

என்பதால் விளங்கும். அப்பர் சுவாமிகளும், திருவங்கமாலையிலே, தலையே நீ வணங்காய் தலைமாலை தலைக்கணிந்து, தலை

யாலே பலிதேருந் தலைவனை தலையே நீ வணங்காய் என்றும், தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவன் என்றும் மாணிக்கவாசகசுவாமிகள். வணங்கத் தலைவைத்து, என்றும் அருளியுள்ளார்கள். சிவபெருமானை வணங்காததலை. சும்மாடுகட்டி சுமையைவைத்து திரிந்துழலும் இதற்குப்பிரமாணம் சிதம்பர சுவாமிகள்.

சும்மாடு கட்டிச்சுமந் துழலுவார் சிலரை
இம்மாநிலத் திலெண்ணுங்கால் அம்மானின்
பொன்னு ரடியிணையைப் போற்றுத பேறன்றே
மன்னு சிதம்பர தேவா.

என்பதால் தெளியலாம். தெளியவே சிவபெருமான் ஒருவரே எல்லாவல்லமையையும் எல்லா அனுக்கிரகமும், எல்லா முதன்மையும் உடையவராவார். ஆகையால் அவரே எல்லாத் தேவர்களுக்குந் தலைவராவார் அவரை வணங்கும் அடியார்களே மற்றெல்லாருக்கும் தலைவராவார்கள், இக்கருத்துப் பற்றியே, திருத்தொண்டர் புராணத்திற்கு பெரியபுராணம்எனப் பெயராயிற்று ஆகவே, திரைகளையுடைய கங்கையைத் தலையிலே சூடியும், மலையான் மகளாகிய உமாதேவியை ஒரு பாகத்திலே வைத்தும், மலையை வில்லாக வளைத்தும் உயிர்களுக்கு கருணை புரிகின்ற வள்ளலாகிய சிவபெருமான்சிற்றம்பலத்திலே நமது பிறவியறுப்பதற்காகவே ஆடிக் கொண்டிருக்கிறார். அப்பெருமான் திருவடியை தலையாரக் கும்பிட்டு, தலைவர்களாகிய பிறவியை அறுத்துய்யுங்கள்என்னுங்கருத்தை திருஞானசம்பந்த சுவாமிகள். சிற்றம்பலந்தன்னை தலையால் வணங்குவார் தலையானார்களே என்பதால் விளக்கியருள்கிறார்.

பெண்ணொரு பாகனைப் பணியுந்
தலைகளே தலைகள்.

என்பது பிரமோத்தரகாண்டம், சிவபெருமானை வணங்குந் தலைகளையுடைய பெரியவர்களைஎல்லாத் தேவர்களும்வணங்குவார்கள் இதனால் அவர்களே தலைவர்கள் என்று தெளிந்து அவர்களை வணங்கி சிவபெருமான் திருவருள் பெறுவோமாக,

———

[தொடரும்]

# ஔவையார் அருளிய "விநாயகர் அகவல்"

"செந்தமிழ்ச் செல்வன்"
புலவர் திரு. சிக்கல். சி. சானகிராமன் அவர்கள்,
தெற்கு வீதி சிக்கல் (அஞ்சல்) நாகை (வட்டம்)

விநாயகரை வழிபட்டு உய்ந்த பெரியோர்கள் பற்பலருள் ஔவைப் பிராட்டியாரும் ஒருவராவர். ஔவைப்பிராட்டியை அறியாதவர் தமிழ்நாட்டில் எவரும் இரார். இளஞ் சிறுவர்கள் பயின்று பயன்அடையும் பொருட்டு ஆத்திச்சூடி கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி என்னும் சிறந்த நூல்களை அருளிச்செய்தவர் ஔவையாரே ஆவர், என்பதனை அனைவருஷ் அறிவர், பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் ஆசிய நாலும் கலந்து தந்து, "சங்கத் தமிழ் மூன்றும் தா" என்றுவேண்டி,வழிபட்டுப்பெரும் புலமைபெற்றவர் ஔவை யார். விநாயகரை வழிபட்டால் நமக்கு வாக்குவன்மையுண் டாகும், நல்ல மனம் உண்டாகும்,திருமகளின் அருட்பார்வை நம்மீது படிந்து, நமக்குச் செல்வங்கள் பலவும் பெருகும், நம் உடம்பிற்கு எத்தகைய நோயும் நேராதுஎன்றும் ஔவையார் உறுதியாகக் கூறி நமக்கெல்லாம் அறிவுறுத்துகின்றார். அத் தகைய ஔவையார், அருளிச் செய்த அரும்பெறல் நூலே 'விநாயகர் அகவல்' என்பது. விநாயகரைப்பற்றிய துதி நூல் கள் பலவற்றுள் விநாயகர்அகவல் என்பது மிகவும் இனியதும் எளியதும் சிறியதும் ஆகும். அளவாற் சிறியது ஆயினும், பொருளால் மிகவும் பெரியது. யோகஞான அநுபவக் கருத் துக்கள் பல பொதிந்து விளங்குவது இந்தச் சிறந்த துதிநூல்! ஔவையார் இதனைப் பாடியருளியது பற்றி ஒரு வரலாறு கூறப்படுகின்றது.

ஔவையார் ஒரு சமயம் வழக்கம்போல் விநாயகரை வழி பட்டுக் கொண்டிருந்தார். அது போது சுந்தரமூர்த்தி சுவாமி கள் வெள்ளையானை மீதும், சேரமான்பெருமான் வெண்புரவி யின் மீதும் ஏறித் திருக்கயிலை சென்றுகொண்டிருத்தலை அவர் அறிந்தார். தாமும் அவர்களுடன் திருக்கயிலைக்குச் செல்லுதல் வேண்டும்என்று விரும்பினர். தமது வழிபாட்டின் நிறைவில், விநாயகரை நோக்கி இவ்வகவலைப் பாடினர். விநாயகர் இவ் வகவலைக்கேட்டு மிகவும் மகிழ்ந்து சுந்தரமூர்த்தி சுவாமிகளும் சேரமான்பெருமான் நாயனரும் சென்று சேர்வதற்கு முன் னரே, ஔவை யாரைத் திருக்கயிலையில் தமது துதிக்கையினுல் சேர்ப்பித்தார். தமக்கு முன்னே ஔவையார் கயிலைக்கு வந்து சேர்ந்திருத்தலைக் கண்ட சேரமான் பெருமான் மிகவும் வியப் புற்று அவர் அங்கு தமக்கு முன்னரே வந்து சேர்ந்தது எங்ங னம்? என அதிசயித்து வினவினர். அப்போது ஔவையார்,

"மதுர மொழிநல் உமையாள், புதல்வர் மலர்ப் பதத்தை
முதிர நினைய வல்லார்க்கு அரிதோ? முகில்போல் முழங்கி
அதிர நடந்திடும் யானையும் தேரும், அதன்பின் வரும்
குதிரையும் காதம், கிழவியும் காதம்; குல மன்னனே."

என்னும் பாடலை அருளிச்செய்து விநாயகரின் அருளால் தாம் அவர்களுக்கு முன்னரே கயிலைக்கு வரமுடிந்ததனைக் கூறி மகிழ்வித்தார் என்பது விநாயகர்அகவல்பற்றியவரலாறு அரிய இனிய துதி நூல்களுள் ஒன்றாக விளங்கும் இத்தகைய சிறந்த 'விநாயகர் அகவல்' என்னும் நூலை, அன்புடன் மனம் கசிந்து உருகி ஓதி வழிபடுபவர் அனைவரும், விநாயகர் அருளை மிகவும் பெற்று உய்தல் திண்ணம்.

## ஔவையார் அருளிய விநாயகர் அகவல்
## உரை விளக்கம்

1—14 சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பல இசை பாடப்
பொன் அரை ஞாணும், பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்து அழகு எறிப்பப்

பேழை வயிறும், பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சுகரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரும் புயமும்
மூன்று கண்ணும், மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியும்
திரண்ட முப்புரி நூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே.

**உரை விளக்கம்:** குளிர்ச்சி பொருந்திய, நறுமணம் கமழ்கின்ற, செந்தாமரை மலர் போன்ற திருவடிகளில் உள்ள சிலம்புகள், பலவகை இனிய இசைகளைப் பாடவும், பொன்னூர் செய்த அரைஞாணும், பூ வேலைப்பாடுகள் அமைந்த துகில் ஆகிய துணியும், அழகிய இடுப்பில் விளங்கி அழகு வீசவும், பெரிய வயிறும், பெரிய உறுதியான தந்தமும், யானை முகமும், விளங்குகின்ற சிவப்புப் பொட்டும், ஐந்து திருக்கைகளும், அவற்றுள் ஒன்றில் அங்குசம் என்னும் படையும், மற்றொன்றில் பாசக் கயிறும், மிடற்றின்கண் தங்கி நீங்காதிருக்கின்ற நீல நிறத்தின் மினுமினுப்பும், தொங்கிய வாய் ஆகிய துதிக்கையும், நான்கு பெரிய தோள்களும், மூன்று கண்களும் மும்மதங்களும் பெருகி நிற்றலால் ஏற்பட்ட தழும்புகளும், இரண்டு முறம் போன்ற காதுகளும், ஒளிவிடுகின்ற பொன்னால் இயன்ற திருமுடியும், திரட்சியுற்ற மூன்று புரிகளைக் கொண்ட பூணூல் விளங்குகின்ற ஒளிமிக்க மார்பும்கொண்டு, சொல்லின் அளவுக்கு அப்பாற்பட்ட மேலான மெய்யுணர்வின் வடிவில், அற்புதமாக நிலைபெற்ற, கற்பக மரம்போலும் வள்ளன்மையுடைய விநாயகராகிய யானையே!

15—26 முப்பழம் நுகரும் மூடிக வாகன
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தான் எழுந்து அருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்தே
திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்துஎன் உளந்தனில் புகுந்து

குருவடிவு ஆகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறம்இது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்து எனக்கு அருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி

உரை விளக்கம்: மா, பலா, வாழை என்னும் முக்கனி களையும் உண்ணுகின்றவரே! பெருச்சாளியை வாகனமாக, ஊர்தியாகக் கொண்டவரே! இப்பிறப்பில் எளிய என்னை அடிமையாகச் செய்துகொள்ள விரும்பி, தாயைப் போன்ற கருணையுடன் என்பொருட்டு எழுந்தருளிவந்து, அழியாமல் வளர்ந்து கொண்டு இருக்கும் பிறவிகளுக்குக் காரணமான அறியாமையைப் போக்கி, திருத்தமாக அமைந்தனவும், முதன்மை வாய்ந்தனவும், ஆகிய திரு ஐந்தெழுத்தின் பொருள்கள் எல்லாம் தெளிவாக என்னிடம் அமையும்படி, குருவின் வடிவத்தையே மேற்கொண்டு இந்நிலவுலகத்தில் தம்முடைய திருப்பாதங்கள் படியும்படி வந்து, பொருளின் தன்மை இது, மெய்ப்பொருள் இது என்று, யான் பிறப்பு இறப்புக்களால் வருந்தி இளைக்காத படி எனக்கு மகிழ்ச்சியுடன் அருளிச் செய்து, வளைகின்ற படைக்கலம் போன்ற தமது கண்ணின் பார்வையினால் கொடிய சஞ்சித வினைகளைப் போக்கி, உவட்டுதல் இல்லாத இனிய உபதேசத்தினை என் செவியில் புகும்படி செய்து, தெவிட்டுதல் இன்றி மேன்மேல் இனிக்கின்ற ஞானத்தின் தெளிவையும் காண்பித்து.

27—30 ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக்கு அருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்து இருள் கடிந்து.

உரை விளக்கம்: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து பொறி அறிவுகளையும் அடக்கும் நெறிமுறைகளை, இன்பத்தை மிகுவிக்கின்ற தமது கருணையினால் இனிதாக எனக்கு அறிவித்து, தத்துவங்கள் ஆகிய கருவிகள் ஒடுங்குவதற்குரிய நுண்பொருட் கருத்துக்களை உணரும்படி செய்து பிராரத்தம், ஆகாமியம் என்னும் இரண்டு வினைகளையும் நீக்கி, மாயை ஆகிய இருளை விளக்கி.

[தொடரும்]

461

உயர்மானுடம்—13

# என்னுரை

புலவர் ச. தனுக்கோடிஇராமசாமி எம். ஏ. அவர்கள்,
தமிழாசிரியர் ஆ. வை. உயர்நிலைப்பள்ளி,
சாத்தூர் 626203

அன்பிற்குரிய வாசகர்களுக்கு,

வணக்கம்!

'உயர்மானுடம்' என்ற தலைப்பில் நான் எழுதிய பன்னிரெண்டு கட்டுரைகளை மேன்மைக்குரிய 'குமரகுருபரன்' இது வரை வெளியிட்டுள்ளான். இந்தக் கட்டுரையோடு இத் தொடரை முடித்துக் கொள்ள நினைக்கிறேன்.

இந்தக் கட்டுரைத் தொடரை எத்தனை பேர் படித்தார்கள்? எத்தனைபேர் ரசித்தார்கள்? எத்தனை பேர் நம்பினார்கள்? எத்தனை பேர் வாழ்க்கையில் பின்பற்ற முயற்சிக்கிறார்கள். எத்தனை பேர் பின்பற்றப் போகிறார்கள் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது.

தென்னாற்காடு, திருநெல்வேலி, கோவை, செங்கற்பட்டு மாவட்டங்களில் இருந்து சில அன்பர்களும் மன்றத்தினரும் பாராட்டுக்கள் தெரிவித்தும் ஆலோசனைக்கேட்டும் எனக்குக் கடிதங்கள் எழுதியிருந்தனர். சில வெளியூர்களுக்குச் சென்றிருந்த போது பாராட்டுக்களைத் தெரிவித்தவர்களும் உண்டு. அவர்களுக்கெல்லாம் என் பணிவான நன்றிகளை இப்பொழுது தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இதே நேரத்தில் என்னுடைய கட்டுரைகளை வன்மையாகக்கண்டித்து ஆசிரியருக்கு கடிதங்கள் சென்றிருக்கின்றன எனவும் அறிகிறேன். மதுரையிலிருந்து ஒரு எம் பி.பி.எஸ். டாக்டர் ஒருவர் என்னிடம் இதிலிலுள்ள கட்டுரை ஒன்றைப் பற்றிப் பேச வேண்டுமென்றார். அவசரமாக நான் வேறொரு

வேலைக்காகப் போய்க் கொண்டிருந்தமையால் அவரோடு இருந்துபேசமுடியவில்லை. பின் அவர் உடலியல் சம்மந்தமாக நான்எழுதிய கருத்து ஒன்றிற்கு மாற்றம் தெரிவிக்க வந்ததாக அவருடைய நண்பர் கூறினர்.

ஒரு நாத்திகனுக இருந்துகொண்டு ஒரு ஆத்திகப்பத்திரிக்கையில் நான் போலி வேடமிட்டு தொடர்ந்து எழுதி வருவதாக சிலர் தொடர்ந்து பல்வேறு வகையில் வசைபாடி வருகிறார்கள். இதைத்தொடர்ந்து நான் கலந்துகொள்ளும்நிகழ்ச்சிகளில் பாடியதை அல்லது பேசியதை மிகுந்த வெறுப்போடு கோபாவேசத்தோடு விமர்சனம் பண்ணுவதும் பரப்புவதும் செய்கிறார்கள்.

நேற்று 16-8-76மாலை ஒரு போலீஸ்காரர் வந்து "S.P. (சூப்பிரண்டெண்டெண்டு ஆப்போலீஸ்) உங்களை வரச்சொல்லுகிறார். ஸ்டேஷனுக்கு வாங்க" என்றார். ரகசியப் போலீஸ் அதிகாரி என்னை விசாரித்தார். நான் கலந்து கொண்ட ஒரு நிகழ்ச்சியின் அழைப்பிதழைக் கையில்வைத்திருந்தார் இறுதியில் "எப்படி நீங்க இவ்வளவு தொல்லைகளுக்கு நடுவில் அமைதியாக இருக்க முடியும்?" என்று அனுதாபப்பட்டார்.

மதுரையிலுள்ள நான் பணியாற்றும் பள்ளி மேலாளர்கள், மாவட்டக் கல்வி அதிகாரி, மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி ஆகியோர் எத்தனையோ முறை எத்தனையோ மனுக்கள் மீது என்னை விசாரணைக்கு உட்படுத்தி விட்டார்கள்.

என்னிடமுள்ள உண்மையான குறைகளை நான் அறியும்படி செய்பவர்களுக்கும், என்தவறுகளுக்கு தாட்சண்யமின்றி நான் தண்டனை பெற ஏற்பாடு செய்பவர்களுக்கும் நான் என்றும் நன்றிக் கடன்பட்டிவனுக நடக்கமுயற்சிப்பேன். ஆனல் காரணமில்லாமல் தங்கள் பலகீனங்களால் தங்கள் நல்லநேரங்களையும் பணத்தையும் சிந்தனையையும் வீணுக்கித் தூற்றியும் ஆறுதல் பெறமுடியாது வருந்துபவர்கள்மீது நான்கோபமோ ஆத்திரமோ கொள்ளவில்லை. அவர்களுக்காக நான் மிகுந்த அனுதாபப்படுகிறேன்.

நல்லவனாக வாழவேண்டும் என்ற சாதாரண எண்ணம் மட்டும் கொண்டு முயலாக இருந்த என்னைத் தீய வழியில் திருப்ப பலர் முயற்சி செய்ததால், பல்வேறுவகையான மிரட்டல்களை வீசியதால்தான் இன்று நான் ஓரளவு துணிச்சல்காரனாக உருவெடுத்து வாழ்க்கையில் சற்று முன்னேறியிருக்கவும் செய்கிறேன் என்று எண்ணுகிறேன். வாழ்க்கையில் தடைகள் தான் உண்மையான முன்னேற்ற முடுக்கிகளோ என்று கூட இப்பொழுது உணருகிறேன்.

உண்மையில் உயர்ந்த வாழ்க்கை வாழவேண்டும் என விரும்பினால் அவர்கள் முதலில் புகழ் பெறலாம் என்று எதிர் பார்க்கக்கூடாது. பல்வேறு விதமான வசைகளை, எதிர்ப்புக்களை, துன்பங்களையே எதிர்பார்க்கவேண்டும். மற்றவர்களுக்கு நாம் துன்பம்செய்யாமல் இருக்கலாம். நாம் பெரும்பான்மையானவர்கள் வாழ்க்கையில் உய்வும், உயர்வும் பெறவேண்டுமென எண்ணி உழைக்கலாம். இருப்பினும் தீமை புரிவோர் நம்மைத் தங்கள் பகைவர்களாகக் கருதி தங்களால் இயன்ற அளவு தீமைகளைச் செய்தேவருவார்கள் இது என் பட்டறிவு.

வலியதீயவர்களின் வெற்றி தற்காலியமானது தான் நல்லவர்கள் தங்கள் பலவீனங்களைஅறிந்து முழுமையாக நன்மைக்காக முயற்சி செய்தால் தோல்வி என்பதே ஏற்படமுடியாது.

உயர்மானுடம் என்ற தலைப்பில் இதுவரை உள்ளத்தையும், உடலையும் எப்படிவளப்படுத்தி வலுப்படுத்தலாம் என்று எழுதி வந்துள்ளேன். எண்ணங்களின் வலிமை என்ன? நம்பிக்கைகள் ஏன் அவசியம்? நமக்குள்ள பலவீனங்கள் யாவை? அவற்றைப்போக்குவதில் நோன்புகளின் பங்குஎன்ன? பிரமச்சரியம் உடலுக்கும் உள்ள சக்தி ஆக்கத்திற்கும் எவ்வாறு உறுதுணை புரிகிறது. தினக்கடமைகளை ஒழுங்குபடுத்துவதின் அவசியமும் உயர்வும் யாது? உடலை எப்படித்தூய்மை உணவு, மருந்துகளால் வளப்படுத்துவது? ஆசனங்கள் உடலை வலுப்படுத்தி வாழவைக்க எவ்வாறு துணை செய்கின்றன? பிராணயாமம் எப்படி உள்ளத்திற்கும் உடலுக்கும்உறுதுணையாக உள்ளது என்று பார்த்தோம். இவை எல்லாமே நான்

படித்த பெரியோர்களின் நூல்களின் செய்தி மட்டுமல்ல; நான் நேரில் பயிற்சி செய்து பார்த்தவையும் ஆகும்.

தனிமனிதன் தன் உடலைப்பேணி வளர்த்து உள்ளத்தை நன்கு பயிற்றி திறமைகள் பெறுவது மட்டும் உயர்வாழ்க்கை ஆகிவிட முடியாது. உடல்நலமும் பலதிறமைகளும் அறிவும் பெற்று கருணையில்லாதவர்களாக இருப்பார்களேயானால் அவர்கள் பெரிய சமூக விரோதிகளாவார்கள்.

அடுத்தவர் துயர்கண்டுவருந்துகிற எண்ணமுடைமைதான் மனிதத்தன்மை. இதைத் திருவள்ளுவர்,

''அறிவினுன் ஆகுவ துண்டோ பிறிதின் நோய்
தந்நோய் போல் போற்றாக் கடை''

என்று கூறியுள்ளார். இராமலிங்க அடிகளும்,

''அருளறிவு ஒன்றே யறிவு-மற்றெல்லாம்
மருளறிவு என்றே வகுத்த-மெய்ச்சிவமே''

என்று கூறியுள்ளார்.

சமுதாயத்தில் ஓரளவு பிடிப்பும் மரியாதையும் ஏற்பட்ட பின்னும் வளர்ச்சி குன்றுவதற்கும் வீழ்ச்சியடைவதற்கும் காரணமாகஇருப்பது ஒழுக்கக்கேடும் திறமைக்குறைவு மட்டு மல்லாது புகழ்வெறியும்காரணமுமாகும். புகழாசை மனிதனை பாதைமாறச் செய்யும் 'துறவியின் சோதனை' என்ற நூலில் டால்ஸ்டாய் சிறப்பாக இதை விளக்கியுள்ளார். பலரும் புகழ வேண்டும் என்று எண்ணிச் செயல்பட்டால் ஒவ்வொருவர் விருப்பத்திற்காகவும் லட்சியத்தை விட்டுக்கொடுத்து, இறுதியில் லட்சியமே இல்லாமல் போய்விடுவான். யார் இகழ்ந்தாலும் பரவாயில்லை நல்லதையே செய்யவேண்டும். உண்மையான புகழ் என்பது நீறுபூத்த நெருப்பாக இருந்து நம்மரணத்திற்குப்பின் ஒளிரக்கூடும். எனவே ''உன் மனச்சாட்சியின் குரலுக்கு யார் செவி சாய்க்காவிட்டாலும் நீ தனித்துத் துணிந்து தொடர்ந்து செல்'' என்று ரவீந்திரநாத்தாகூர் கூறியுள்ளதை நான் அடிக்கடி நினைத்துக் கொள்ளுவது உண்டு.

டாக்டர் மு. வ அவர்கள் எழுதிய எளிய உரையுடன் கூடிய திருக்குறள் புத்தகத்தை மீண்டும் மீண்டும் படித்து

அதிலுள்ள அறிவுரைப்படி சிந்தித்து நடக்கும்படி வாசகர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

டாக்டர் மு. வ. அவர்களோடு ஒருமுறை இரண்டுமணி நேரம் பேசிக்கொண்டிருந்தேன். இறுதியில் எனக்கு என்ன அறிவுரை கூறுகிறீர்கள் என்று கேட்டபொழுது 'சங்ககாலப் பெரியவர்கள் நல்லது செய்யாவிட்டாலும் தீமை செய்யாது வாழுங்கள்' என அறிவுரை கூறியுள்ளார்கள் என்று கூறி அமைதியில் ஆழ்ந்தார் பின் '**வாழ்க்கையில் அமைதியடையப் பயிலனும்**' என்று கூறினர் எவ்வளவு இன்னல்கள், இன்பங்கள், அவமானம், புகழ் நடுவிலும் நான் ஒருவித அமைதியை அடையவே முற்படுகிறேன். அது சுகத்தையும் நிரந்தரத்தையும் கொடுக்குமென நம்புவதால் வாசகர்களை அதையே பயிற்சித்துப் பார்க்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

'குமரகுருபரன்' இதழ் ஆசிரியர் அவர்களுக்கு நான் நிறைய நன்றிக் கடன்பட்டுள்ளேன். அவருடைய ஒவ்வொரு அஞ்சல் மூலமும் அதை நான் புரிந்துகொண்டேன். அதை விளக்கின் நீளும். இது வெற்றுப் புகழ்ச்சியன்று.

என்னுடைய நிலையை எப்படியோ தெரிந்துகொண்ட ஆசிரியர் ஒருமுறை, "சலசலப்புகளுக்கு அஞ்சாத கடினமான உழைப்புள்ள நீங்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவீர்கள்" என்று வாழ்த்தி எழுதியிருந்தார்.

28-7-76 நாளிட்ட அவருடைய கடிதத்தில்,

"The great Height reached and kept by great men, was never by Accident, but the fruit of perseverance indomitable and resolute will, never failing courage speeded up by unswerving incessant labour"

— Abbot's Nepolean.

தங்கள் தளராஊக்கமும் விடாமுயற்சியும் தங்களை எதிர்பார்த்திருக்கும் சிறப்பான ஆக்கத்தின் அறிகுறியேயாகும் என்று எழுதியுள்ளார். இது என் ஒருவனுக்கு மட்டும் பொருத்தமானது அல்ல. உலக மாந்தர் அனைவருக்கும் ஏற்ற நீதி.

கட்டுரையை மாற்றாமல் அப்படியே வெளியிட்ட பெருந் தன்மை அவருடையது. தினக் கடமைக் கட்டுரையில் ஒரு சொல்லை மாற்றுவதற்காக கடிதம் எழுதி என் அனுமதியைக் கேட்டார். தொடர்கட்டுரை எழுதுவதற்கு ஒருநல்ல வாய்ப் பளித்த ஆசிரியர் அவர்களுக்கு என்மனமார்ந்த வணக்கத்தை யும்நன்றியையும்தெரிவித்து வாழ்க்கையில் இவ்வுதவியை நான் மறக்கமாட்டேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

Gitanjali

Where the mind is without fear and the head is held
Where knowledge is free [high
Where the world has not been broken up into
fragments by narrow domestic walls
Where words come out from the depth of truth
Where tireless striving stretches its arms
towards perfection
In to that heaven of freedom, my father
let my country awake! — R. Tagore.

"எங்கே அச்சமற்ற மனமும் தலைநிமிர்ந்த அறிவும்உள்ளதோ
எங்கே அறிவிற்கு தடையில்லாச் சுதந்திரம் உண்டோ
எங்கே உலகம் தன் சுயநலனுக்காக துண்டப்படாதோ
எங்கே சொற்கள் ஆழமான உண்மையிருந்து வருமோ
எங்கே மாசற்ற முழுமை நோக்கி களைப்பற்ற போராட்ட
எந்தையே அந்தச் சுதந்திரமான மோட்சம் [முள்ளதோ
நோக்கி எந்நாடு எழட்டும்"

என்ற இரவீந்திரநாத் தாகூரின் லட்சியபூமி நோக்கி என் நாடு எழ வேண்டும் என நான் ஆசைப்படுகிறேன்.

This is my prayer to thee, my lord!
Strike strike at the root of penury in my heart
Give me the strength to take my love
fruitful in service
Give me the strength never to disown

the poor and bend my knees before insolent might
Give me the strength to raise my mind
high above daily trifles
And give me the strength to surrender
my strength to thy will with love —R. Tagore.

எந்தையே! இதுதான் என்வழிபாடு என்அற்பத்தின் வேரையே நசுக்கிவிடு!
என் இன்ப துன்பங்களை எளிதாகத் தாங்கிக் கொள்ளும் வலிமை எனக்குத்தா!
என் ஆர்வமெல்லாம் நற்பணியிலே செலுத்துகின்ற வலிமை எனக்குத்தா!
ஏழையரை ஏமாற்ரு, கொடிய வலியார்க்கு அடிபணியா வலிமை எனக்குத்தா!
என் நித்தியச் செயல்களில் மூழ்கிடாத மன வலிமை எனக்குத்தா!
என்வலிமையெலாம் உன்னடியில் காதலொடுஅற்பணிக்கும் வலிமைஎனக்குத்தா!

என்ற இரவீந்திரரின் வழிபாட்டை நோக்கி, வாழ்வை நோக்கி, வேள்வியை நோக்கி நான் நடக்கிறேன். விருப்பமுள்ள வாசகர்களை இவ்வேள்வியில் கலந்துகொள்ள அழைக்கிறேன்.

---

" ஞானசம்பந்தம் "
அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்'

உள்நாடு ரூ. 6–00 வெளிநாடு ரூ. 10-00

செயலாளர், " ஞானசம்பந்தம்" அச்சகம் "
தருமபுரம், மாயூரம் P. O.

# சைவ சமயத்தின் மாண்பு 4

**ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்,**

**இளவரசு, மதுரை ஆதீனம்.**

இறைவனைச் சில சமயங்கள் தாயாக வைத்து வணங்குகின்றன. மற்றும் சில சமயங்கள் தந்தையாகக் கருதிப் போற்றுகின்றன.

"அன்னே அனே எனும் சில சமயம்
நின்னையே ஐயா ஐயா என்னவே
அலறிடும் சில சமயம்..........."

*(—எங்கும் நிறைகின்ற பொருள் பாடல்-1)*

என்று தாயுமான சுவாமிகள் கடவுளைத் தந்தையின் நிலையில் வைத்துச் சில சமயங்களும், தாயின் நிலையில் வைத்துச் சில சமயங்களும் போற்றி வழிபட்டு வருதலைக் குறிப்பிடுகின்றார்.

கடவுள் தாயும், தந்தையுமாக ஒரு சேர இருந்து நம்மனோர்க்கு அருள்புரிந்து வரும் உண்மையினையே நம் தமிழ் நாட்டில் சிறப்பாகப் போற்றப்பெறும் சங்கரநாராயண மூர்த்தம் அர்த்தநாரீசுவர மூர்த்தம் முதலியன இனிது உணர்த்துகின்றன. இவ்வாறே, இறைவனை இணையற்ற ஒருபெருந்தலைவன்என்றும், ஒப்புயர்வற்ற ஒருபேரரசன் என்றும், மாபெரும் யோகி என்றும், சிறந்த நல்ல ஞானாசிரியன் என்றும், பிறவாறும் பற்பல நிலைகளில் பலப்பல சமயங்களும் போற்றி வருதலைக் காண்கின்றோம்.

இறைவனின் இப்பலவகை நிலைகளையும் இயல்புகளையும் பற்றிச் சைவசித்தாந்த நூலாகிய சிவஞான சித்தியாரில் ஆசிரியர் அருள்நந்திச் சிவாச்சாரியார் ஆங்காங்கே அழகுற குறிப்பிட்டருள்கின்றார்.

"மறைகள் ஈசன் சொல்; அச்சொல் வழிவாரா உயிரை வைக்கும்
சிறைகள் மாநிரயம்; இட்ட பணி செய்வோர் செல்வத்தோடும்

உறையும் மாபதிகள், உம்பர் உலகங்கள்; யோனிக் கெல்லாம்
இறைவன் ஆணையினுல் இன்ப துன்பங்கள் இவையதாகும்'', (120)

இதன் பொருள்: வேதாகமங்கள் சிவபெருமான் அருளிய வாக்குகளாம். அவ்வாக்குகள்படி நடவாத உயிர்களைத் தண்டித்தற் பொருட்டு, அவனுல் அமைக்கப்பட்ட சிறைச்சாலைகளே பெரிய நரகங்கள். அவற்றின்படி நடப்போர் சுகமாக வாழ்கின்ற இடந்தான் சொர்க்கம் முதலிய மேல் உலகங்களாகும். எல்லா உயிர்களுக்கும் இன்பதுன்பங்கள் வந்துகூடுவது சிவபெருமானது ஆணையால்தான்.

மேற்கண்ட பாடலின் பொருளை கீழ்வரும் பாடல், உவமை ஒன்றின் மூலம் விளக்குகிறது

''ஆணையால் அவனி மன்னன் அருமறை முறை செய்யாரை
ஆணையின் தண்டம் செய்தும் அருஞ்சிறையிட்டு வைப்பன்
ஆணையின் வழி செல்வோருக்கு அரும்பதி செல்வம் நல்கி
ஆணையும் வைப்பன் எங்கும் ஆணையே — ஆணையே காண்'' (121)

இதன்பொருள்: கட்டளைப்படி நடவாதவரை அரசன் தனது அதிகார சக்தியினுலே தண்டிப்பான் கட்டளைப்படி நடப்போரை அவ்வதிகார சக்தியினுலே வாழ்விப்பான். அவனது இராஜ்ஜியம் எங்கும் தனது அதிகாரசத்தியினுல் மக்களை வாழ்வித்தலும், தண்டித்தலும் செய்வான். அதுபோலவே எல்லாம் வல்ல எம்பெருமானும். உயிர்களை ஆண்டு வருகின்ருன் என்பதாம்.

''அரசனும் செய்வது ஈசன் அருள்வழி அரும்பாவங்கள்
தரையுளோர் செய்யின் தீய தண்டலில் வைத்துத் தண்டத்து
உரை செய்து தீர்ப்பன் பின்பு சொல்வழி நடப்பர்
தூயோர் நிரயமும் சேரார் அந்த நிரயமும் நீர்மை ஈதாம்'' (122)

இதன் பொருள்: இப்பூமியிலே செய்யும் பெரிய பாவங்கள் அரச தண்டனையினுல் ஒழிதலாலும், பின்பு அப்பாவங்களுக்கு நரகதண்டனை இல்லாமையாலும், நரக தண்டனையும் அரச தண்டனையைப் போன்றிருத்தலாலும், அரசன் செய்யும் தண்டனையும்சிவபெருமானின்அருள்வழிநின்றுசெய்வதேயாம்

உலகின் பல பகுதிகளில் தோன்றிய அருளாளர்கள், சான்ருேர் பெருமக்கள் ஆகியோர் நாடு, மொழி, இனம், காலம்,

சூழ்நிலை ஆகியவற்றில் வேறுபட்டுத் தோன்றினும், அனுபவ நலம் நிரம்பிச் சிறந்து திகழும் அவர்தம் அறிவுரைகள் அனைத்தும், ஒரே கருத்தும், ஒரே குரலும், ஒரே போக்கும் உடையனவாகவே திகழும். பெரிய உள்ளங்கள் ஒரேதன்மையான ஒத்த உணர்வையே கொண்டதாகவே விளங்கும் (Great minds think alike) என்று அறிஞர்கள் பலரும் ஆராய்ந்து கூறுவர்.

நம்மையெல்லாம், இப்பூவுலகில் பிறக்கச்செய்து, நம்மை வாழ்வித்து வருகின்ற எல்லாம் வல்ல இறைவனை முழு அளவில் நம்பி அன்புடன் வணங்கி வழிபட்டால், நம் நோய்கள் நீங்கி நலம்பெற்று வாழ்தல் திண்ணம். சமய வாழ்விலும் சரி, உலகியல் வாழ்விலும் சரி நம்பிக்கை என்பது மிகவும் இன்றியமையாதது அளவிலா ஆற்றல்வாய்ந்தது. மேலைநாடுகளில் ''நம்பிக்கை மருத்துவ முறை'' (Faith-Healing) பெரிதும் பரவி வருகின்றது.

உலக நாடுகள் பலவற்றிலும் தோன்றி, உண்மையை உலகுக்கு உணர்த்தியுள்ள ஞானியர்கள் பலரும் விதியின் வலிமையைப் பற்றி மிகத்தெளிவாக எழுதியிருக்கிறார்கள். விதியானது,நம்மை எத்தனைச்சிக்கல்களுக்குள் பிணையவைத்து எத்தனை எத்தனைத் துன்பங்களை நமக்கு ஊட்டி வருகின்றது என்ற வரலாறுதான், மனித குலத்தின் பெரும் வரலாறாக இருப்பதைக் காண்கின்றோம்.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும். (380)

என்றும்,

இருவேறு உலகத்து இயற்கை, திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு. (374)

என்றும்,

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது. (377)

என்றும்,

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும். (373)

என்றும்,

பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம. (376)

என்றும், ஊழின் வலிமையை திருவள்ளுவப்பெருமான் மிகத் தெளிவாக விளக்கியிருத்தலை நாம் காண்கின்றோம்.

அதுபோலவே, உலகப்புகழ்பெற்ற பாரசீகக் கவிஞனை உமர்கய்யாம் பாடுகிறார்.

"The moving finger writes and
writes and moves on
Nor all thy piety nor wit
small lure it back
To cancel half a line
Nor all thy tears
Wash out a word of it".

தலையிலே எழுதுகின்ற விதியின்கையானது எழுதிஎழுதி மேற்செல்கின்றது. தொழுது கெஞ்சி நின்றாலும், சூழ்ச்சி பலவும் செய்தாலும், அந்த விதியின் எழுத்தை அரைவரிகூட அழிக்க முடியுமா? முடியாதே! அழுமட்டுமா? ஆறுகக் கண்ணீர் பொழிந்தாலும் தலை எழுத்திலே ஒரு வார்த்தையைக் கூடக்கண்ணீரால் கழுவிவிட முடியாதே? என்றுமிக ஆணித்தரமாக ஊழின் வலிமையைப் பற்றிப் பாடியிருக்கின்றான்.

இதையே, எமது மதுரை ஆதீன குருமகா சன்னிதானம் அவர்களும்,

We have come here with a judgment for what we have been doing before: we Continue to live after death for what we have done here. The judgment is written on our palm, by the Omnipotent, the Omniscient, and All powerful God" 12 lunar months prior o our birth in this world.

என்று தனது முப்பதாண்டுக் கால ஆராய்ச்சியின் மூலம் இந்த பேருண்மையினை நமக்கு அருளுகின்றார்கள்.

நாம் முன்பிறவியில்செய்த புண்ணிய பாவச் செயல்களுக்குத் தகுந்தபடியே, இந்த உலகத்தில் ஒரு தீர்ப்புப் போடப் பெற்றுப் பிறந்திருக்கிறோம். இனி, இப்பிறவியில் நம்முடைய செயல்கள் எப்படி இருக்கின்றனவோ, அதற்குத் தக்கவாறு நாம் அருள்உலகிலோ இருள் உலகிலோ தொடர்ந்து வாழ்ந்து வருவோம். அவ்வாறு, எல்லாம் வல்ல இறைவனால் நமக்கு அருளியிருக்கின்ற தீர்ப்புகள் நமது கைகளில் ரேகைக்கோடுகளாக எழுதப் பெற்றிருக்கின்றன. இதனை எம்மதத்தவராக இருந்தாலும் சோதித்துப் பார்த்து உணர்ந்து கொள்ளலாம் என்பதே நமது குருமகா சன்னிதானம் அவர்களின் முடிந்த முடிபாகும். இக்கருத்துக்களுக்கு, சைவசித்தாந்த நூலாகிய சிவஞானசித்தியார் சான்று தருகின்றது.

[தொடரும்]

# சேக்கிழாரும் சேயிழையார்களும் 3

'சிவநெறித் தவமணி'
செல்வி: த. பத்மாவதி அவர்கள்,
மதுரை ஆதீன சிஷ்யை,
54, ஜடாமுனி கோவில் மேலச்சந்து, மதுரை.

## இசைஞானிப் பிராட்டியார்

பத்தினி, பத்தர்கள், தத்துவ ஞானிகள் இவர்களால் சிறந்தபூமி நமது பாரதபூமி. ஆயினும் சிறப்புடைப் பொருளை முந்துறக் கிளத்தல் என்ற முறையில் பத்தினியரை முதலில் வைத்துப் போற்றினர் நமது திருமூலதேவ நாயனர் தனது திருமந்திர நூலில், பத்தர்களும் தத்துவ ஞானிகளும் பத்து மாதம் இருந்து விளையும் விளைநிலம் பத்தினிகள் தானே.

தூய மைந்தர்களைப் பெறுதல் உலகிற்குப்புரியும் நன்மைகளுள் முதன்மையானது ஆகும். அழியாத் திரிபுரங்களை எரித்து, அழித்த விரிசடைக் கடவுளால் ஆட்கொள்ளப் பெற்றுத் திருத்தொண்டத் தொகை பாடி உலகை உய்வித்த நம்பியாண்டார் நம்பிகளை உலகிற்குப் பெற்றுக் கொடுத்த இசை ஞானிப் பிராட்டியார் உத்தமியின் பெருமை சொல்லும் தரமன்று ஆதலினுலேயே.

> "ஒழியாப் பெருமைச் சடையனுர் உரிமைச் செல்வத் திருமனையார்
> அழியாப் புரங்கள் எரித்தழித் தாண்ட நம்பிதனைப் பயந்தார்
> இழியாக் குலத்தின் இசைஞானிப் பிராட்டியாரை என்சிறுபுன்
> மொழியாற் புகழ முடியுமோ முடியாதெவர்க்கு முடியாதால்"

என்று மும்முறை முடியாமையை வலியுறுத்துகிறர்.

இத்தகைய பெருமைமிக்க பிராட்டியார் கமலாபுரம் என்னும் திருவாரூரில் சைவ கௌதம கோத்திரம், ஞானசிவாச்சாரியார் பரம்பரையில் அவதரித்தவர் என்று திருவாரூர்க் கல்வெட்டினுல் அறியப்படுகிறது.

சமயகுரவர் நால்வரில் ஒருவராகிய சுந்தரமூர்த்தி நாயனரை மைந்தராகப் பெற்ற சடையனுர்க்கு வாழ்க்கைத்

துணைவியாராக வாய்த்த பெருமை ஒன்றினாலேயே, இவ்வம்மையார் 63 தனியடியார்களில் ஒரு அடியாராகப் போற்றப் பெறுகிறார். சேக்கிழார் பெருமான், திருஞான சம்பந்தப் பெருமானைப் பெற்றுத்தந்த பகவதியாருக்கோ, திருநாவுக்கரசு நாயனாரைப் பெற்றளித்த மாதினியாருக்கோ தனியாகப் புராணம் பாடவில்லை. ஆனால் சுந்தரரைப் பெற்றளித்த இசை ஞானிப் பிராட்டியாருக்கு இசைஞானியார் புராணம் என்று தனிப்புராணம் பாடியிருக்கிறார்.

அப்படி அவருக்கு மாத்திரம் தனிப்புராணம் பாடியதன் காரணம் என்ன? திருஞானசம்பந்தப் பெருமானும் திருநாவுக்கரசர் பெருமானும், சிவபெருமானைப் பாடியவர்கள், சுந்தரர் பெருமான் அடியவர் பெருமையைப் பாடினார், அரன் வழி பாட்டிலும் அடியார் வழிபாடு சிறந்தது.

உலகிலேயே பெரியது எது என்று, ஞானபண்டிதனும் முருகப் பெருமான் கேட்டகேள்விக்கு, ஞானத் தாயாம் ஔவைப் பிராட்டியார், கீழ்வருமாறு பதில் கூறுகிறார்.

"பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!  
பெரிது பெரிது புவனம் பெரிது  
புவனமோ நான்முகன் படைப்பு  
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்  
கரியமாலோ அலைகடல் துயின்றோன்  
அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்  
குறுமுனியோ கலசத்தில் பிறந்தோன்  
கலசமோ புவியிற் சிறுமண்  
புவியோ அரவினுக்கு ஒரு தலைப்பாரம்  
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்  
உமையோ இறைவர் பாகத்து ஒடுக்கம்  
இறைவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்  
தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே.

ஆகையால் அடியவரை வழிபட்டால், அரனையும் வழிபட்ட பயனும் சேர்த்துக் கிடைக்கும். ஆனால் அரனை வழிபட்டால் அடியவரை வழிபட்ட பயன்இல்லை. அதனால்தான் திருமூலர்

"படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்  
நடமாடும் கோயில் நம்பர்க் கங்காதா

நடமாடும் கோயில் நம்பர்க் கொன் றீயில்
படமாடும் கோயில் பகவற் கதாமே''

என்று அருளியிருக்கிறார். இப்பாடலில் இரண்டு கோயிலைக் குறிக்கிறார். ஒன்று இறைவன் எழுந்தருளியிருப்பதற்காகப் பண்டைக்காலம் தொட்டு மன்னர்களாலும், மக்களாலும் கட்டப்பட்ட கற்கோயில்களாகும். அதில் விண்ணுலகில் மறைந்து அருள் புரிகின்ற இறைவனை, வந்து வீற்றிருக்கும்படி, ஆகம முறைப்படி வேண்டிக்கொண்டு, பிராணப் பிரதிஷ்டை என்ற கும்பாபிஷேகம் நடத்திய பிறகு, இறைவன் அக்கோயிலில் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள் புரிகின்றார். இது படமாடக் கோயிலாகும்.

''அண்ணலே எனை ஆண்டு கொண்டருளிய அமுதே
விண்ணிலே மறைந்தருள் புரிவேத நாயகனே
கண்ணினல் திருக்கயிலையில் இருந்த நின்கோலம்
நண்ணி நான் தொழ நயந்து அருள்புரி.

எனப் பணிந்தார்.

மற்றவிதமான நடமாடுங்கோயிலைப் பற்றி சிந்திப்போம். யார் ஒருவர் சதா இறைவனை நினைந்து உருகித் தன் உள்ளத்தில் இறைவனை வீற்றிருக்கும்படி வேண்டி, அந்தர்யாக பூசை என்னும், அகப் பூசையும், புறப்பூசையும் செய்து புறப்பூசை முடிவில் தனது உள்ளத்தில் அவுரை வீற்றிருக்கும்படி வேண்டிக் கொள்கிறார்களோ, அவர்களுடைய உள்ளத்திலே எழுந்தருளி பக்தர்க்கு அருள் புரிகின்றார். அப்படிப் பூசை செய்கின்றவர்களே நடமாடுங் கோயில்களாவார்கள்.

இவ்விரண்டு வகையான கோயில்களில், நடமாடுங் கோயில்களாவார்கள்.

இவ்விரண்டு வகையானகோயில்களில் நடமாடுங்கோயில் விசேஷமுடையது. அடியவர்க்கு அன்னம்அளித்தால் மகேஸ்வர பூசை எனப்படும். மற்றவர்க்கு உணவளிப்பது அன்ன தானமாகும். இந்த உண்மை தெரியாத பலர் சாதாரண மனிதர்களுக்குச் செய்யும் அன்னதானத்தை மகேஸ்வர பூசை என்று சொல்கிறார்கள். திருமூலர் மேற்கூறிய பாடல் மூலம்

நடமாடும் கோயிலாக இருக்கின்ற அடியவர்கட்கு ஏதாவது ஒன்று கொடுத்தால்பலன் இரட்டிப்பாகக் கிடைக்கும் என்று ஆணித்தரமாகக் கூறுகின்றார்.

உண்மை அடியார்கள் பலன்கருதாது பக்திசெலுத்துபவர்கள்.

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்,'

என்றுநாவுக்கரசரைப்பற்றிசேக்கிழார்பெருமான்கூறுகின்றார்

மகாலெக்ஷிமிக்கு சுயம்வரம் நடைபெற்றபோது தேவர்கள் அனைவரும் சுயம்வரத்திற்காகக் கூடியிருந்தனர். மகாலெக்ஷ்மி விருப்பமே இல்லாத ஒருவருக்கே நான் மாலையிடுவேன் என்று விரும்பிப் பாற்கடலில் விருப்பு வெறுப்பற்றுப் பள்ளிகொண்டிருந்த திருமாலுக்கு மாலையிட்டு மணவாளனாக்கிக் கொண்டாள்.

எனவேவேண்டாமைவேண்டவரும் என்றபடியாரொருவர் பலன் கருதாது விருப்பு வெறுப்பற்று இறைவனுக்கே முற்றமுற்ற அடிபணிந்து வாழ்கின்றாரோ, அவரை மற்றவரெல்லாம் வணங்கும்படி இறைவன் செய்து விடுகிறார். அதனாலேயே,

"பிணத்தினை ஒத்து வாழ்வோர் பின்நடை பிணங்கள் போல
உணக்கியே உழல்வீர் உங்கள் உடல் உயிர் உணர்வுமெல்லாம்
கணத்திடைத் தோன்றி மாயும் காயமென்றறிந் தொருக்கால்
வணக்குறீர் அரனை என்றும் வானவர் வணங்க வைப்பன்"

என்று அருணந்தி சிவாச்சாரியார் தனது சிவஞானசித்தியாரில் அருளியிருக்கிறார். ஒருமுறை நிலத்தில் விதையிட்டால் அது விளைந்துபின்,பலகாலம் பலன்தருதல்போல, ஒருக்கால் அரனை வழிபட்டால், அரன் என்றுமே வானவர்களும் வணங்கும்படி செய்கிறான் என்று நயமாகக் குறிப்பிடுகிறார்.

அடியார்கள் பேசும் தெய்வமாக இருக்கிறார்கள் இறைவன் அடியவர் மூலம் அருள்புரிகின்றார். ஆண்டவன் அடி

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# ENGLISH TRANSLATION OF TAMIL LITERATURES

*Prof: V. PERUMAL*, M.A B.T. M.R.A S.
K G. F. First Grade College,
Oorgaum, Kolar Gold Field
(Mysore State)

(Continved from 416 of vol 27)

(7) Intellectual honesty is one of the basic qualifications of a bona-fide translator. If a translator feels that a particular passage is not clear, it is better on his part to admit the fact instead of rendering a bogus translation and confusing himself and others. For instance, Mr. T. B. Krishnaswami, was honest enough to admit that six stanzas from Aranericharam could not be translated into English on account of unintelligibility of meaning. Such an honesty is a healthy attitude. Rendering a false translation is not only committing injustice to the

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

யார் உள்ளத்துள் ஒடுக்கம் ஆதலால் அடியவர் பெருமை சொல்லப் பெரிது. நினைக்கப் பெரிது. அவர்களைக் குருவாகப் பற்றி, அவர்கள் நாமம் சொல்லிப் பிறவி நீங்கப் பெறலாம். சுந்தரர் நாமம் நவின்று வீடுபேறுபெற்ற பெருமிழலைக் குறும்ப நாயனார் வரலாறு இதற்குச் சான்று. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது திருவாலங்காட்டுத் திருப்பதிகத்தில் ஒவ்வொரு பாடலின் ஈற்றடியிலும் "அடியார்க்கடியேன் ஆவேனே" என்று பாடியருளியிருக்கிறார்.

இத்தகைய, அடியார்க்கு அடியாராகவும், அண்டியவரைக் கரையேற்றும் குருநாதராகவும் திகழ்கின்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளை உலகிற்கீன்றளித்த இசைஞானிப்பிராட்டியாரைச் சிந்தித்து வந்திப்போமாக.

(தொடரும்)

original author but also doing disservice to the language and literature.

(8) A translation should be as brief as possible. Though it may be impossible to maintain brevity at all times a translator must aim at complete brevity. In other words the translator must always follow a 'short and sweet' policy.

> ''உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
> விழிப்பது போலும் பிறப்பு'' (Kural: 339)

The above couplet has been translated into English by Rev. Drew in the following brief manner;

'Death is like sleep; birth is like awaking from it'.

> ''சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
> சொல்லிற் பயனிலாச் சொல்'' (Kural: 200)

The above couplet can be translated as 'speak sensibly, Avoid nonsense'.

(9) Naturalness of language, style and approach have a great effect in impressing the readers The translator should translate the thought of the original author in his (translator's) own **natural way**.

> ''நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை
> தலைமக்கள் இல்வழி இல்'' (Kural: 770)

Rev. John Lazarus, on of the translators of Thirukkural into English has rendered the above couplet in the following natural way;

'Though an army may contain a large number of permanent soldiers, it cannot last if it has no generals'.

(10) Speech (narration) of the original should remain unaltered in the translation. The direct speech found in the original must remain in the trans-

lation in order to bring the force and spirit of the original author. Following is a beautiful poem that portrays the love sentiments in appealing and mellifluous language which is characterized by the excellence of direct speech:

"யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே" (Kurunthogai:40)

Mr. R. Balakrishna Mudaliyar, has rendered the above poem into English without changing the narration. Following is his translation:

'In what way were your mother and my mother related before (our first meeting). What relationship existed between my father and your father? How did we come to know each other? Our loving hearts mingled one with the other (at first sight) as rain falling on reddish soil and mixing with it'.

(The Golden Anthology of Ancient Tamil Literature Volume I. PP. 92, 93)

(11) Lucidity of style is one of the characteristics of a good translation. The translation of Mr. R. Balakrishna Mudaliar is lucid in style and unambiguous in meaning.

"பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும் தொடை புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றி யாங்கு என்றும் சான்றோர்
சான்றோர் பாலராய
சாலார் சாலார் பாலரா குபவே" (Purananooru:218)

Mr. Balakrishna Mudaliar has rendered the above verse into English in the following lucid style:

'Though gold and coral, pearl and the attractive diamond born of hard, high rocks belong to different regions, when a lovely jewel of rare value is wrought into harmony, they all appear together. Even so, the noble are found in company with the noble, (as) the ignoble with the ignoble. (The Golden Anthology of Ancient Tamil Literature Vol. II, Page 154)

The Special feature of Mr I D Thangaswamy's English translation of Thirukkural is the lucidity of style.

''குடி செய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்'' (Kural: 1023)

Following is his translation of the above couplet.

'If a man is determined to raise the honour of his family, God himself will gird up His loins and hasten to aid him'.

———

[தொடரும்]

உ
சிவ சிவ
சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவசயங் கெடநிற்க ஆனந்த மாமே.